# தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

## அலகு 1 இலக்கணம்

**பகுதி 1. எழுத்து**

பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், சந்திப்பிழை, குறில்–நெடில் வேறுபாடு, ஒலி வேறுபாடுகள் (மயங்கொலிகள்) – ணகர, னகர வேறுபாடு, ரகர, றகர வேறுபாடுகள், லகர, ழகர, ளகர வேறுபாடுகள், இன எழுத்துகள் , சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள் அறிதல்,

**பகுதி 2. சொல்**

வேர்ச்சொல் அறிதல் – வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் அறிதல், அயற்சொல் – தமிழ்ச்சொல், எதிர்ச்சொல், வினைச்சொல், எழுத்துப்பிழை நீக்குதல்.

## அலகு 2 சொல்லகராதி

ஓரெழுத்து ஒரு மொழி, ஒரு சொல் – பல பொருள்கள் மற்றும் பல சொற்கள் – ஒரு பொருள், பொருந்தாச் சொல்லைக் கண்டறிதல், அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல், பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு, வட்டார வழக்குச் சொற்கள், சொல்லும் பொருளும் அறிதல், கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்.

## அலகு 3 எழுதும் திறன்

சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குதல், எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல் – செய்தி, கட்டளை, வினா, உணர்ச்சி வாக்கியங்கள் ; தனி, தொடர், கலவை வாக்கியங்கள் ; உடன்பாடு, எதிர்மறை, செய்வினை, செயப்பாட்டுவினை , தன்வினை, பிறவினை வாக்கியங்கள், நேர்க்கூற்று, அயற்கூற்று வாக்கியங்கள், ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல், வாக்கியத்தில் உண்டாகும் பிழைகளும் நீக்கங்களும் , மரபுத்தமிழ் – வழு, வழா, வழுவமைதி நிலைகள், வினா வகைகள், விடை வகைகள், மரபுப் பெயர்கள் – ஒலிமரபு, இளமைப் பெயர்கள், வாழிடங்கள், தொகுப்பிடங்கள், பொருள்களின் தொகுப்பு, வினை மரபு. நிறுத்தற்குறியீடுகள்.

## அலகு 4 கலைச்சொற்கள்

மொழி, இயற்கை (புவியியல் / நிலவியல்) , அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கல்வி மற்றும் தொழில்நுட்பம், நாகரிகம் மற்றும் பண்பாடு, நாடு மற்றும் சமூகம், அறம், தத்துவம், சிந்தனை, மனிதம் மற்றும் ஆளுமை, கலை மற்றும் அழகியல், மருத்துவம், நூலகம், தொடர்வண்டி நிலையம், உணவகம், வானூர்தி நிலையம், நீதிமன்றம், திரைத்துறை, வங்கி, அலுவலகப் பொருள்கள், இதர கலைச்சொற்கள், பரிதிமாற் கலைஞரின் சொல்லாக்கம், சட்டங்கள், திரைப்படக் கலை, பட்டங்கள், இதழியல்.

## அலகு 5 வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல், உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல் – உவமைகளும் விளக்கங்களும், பழமொழிகள் பொருளறிதல் – பழமொழிகளும் விளக்கங்களும், மரபுத்தொடரின் பொருளறிதல்.

## அலகு 6 எளிய மொழிபெயர்ப்பு

கவிதையியல், நாடகவியல், தொடரியல், மொழி பெயர்ப்புக்கலை, ஊடகவியல், இலக்கியவியல், , அரங்கவியல், திறனாய்வு அணுகுமுறைகள், இலக்கணவியல், மின்னணு ஊடகம், கணினியியல்,

## அலகு 7 இலக்கியம், தமிழறிஞர்களும் தமிழ்த்தொண்டும்

**இலக்கியம் :** திருக்குறள் தொடர்பான செய்திகள், ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை ஆகிய இருபது அதிகாரங்கள்.

**அற நூல்கள் தொடர்பான செய்திகள் :** பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஔவையார் பாடல்கள்.

**தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும் :** தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள், தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள், தமிழ்த் தொண்டாற்றிய அயல்நாட்டவர், அகரமுதலி வரலாறு, தமிழக மகளிரின் சிறப்புகள்.

**கூடுதல் தகவல்கள்**

# அலகு 1 - இலக்கணம்

## எழுத்து

## பிரித்து எழுதுதல்

### பிரித்து எழுதுதல்

ஓலைச்சுவடி – ஓலை + சுவடி
தமிழ்ப்பணி – தமிழ் + பணி
குறிஞ்சிப்பாட்டு – குறிஞ்சி + பாட்டு
தமக்குரியர் – தமக்கு + உரியர்
அன்பீனும் – அன்பு + ஈனும்
நிழலருமை – நிழல் + அருமை
வழக்கென்ப – வழக்கு + என்ப
புறத்துறுப்பு – புறம் + அத்து + உறுப்பு
தரமில்லை – தரம் + இல்லை
திருவருட்பா – திரு + அருள்+பா
என்பிலதனை – என்பு + இலதனை
வேறில்லை – வேறு + இல்லை
தொழிலனைத்தும் – தொழில் + அனைத்தும்
இரண்டொழிய – இரண்டு + ஒழிய
இரும்பாணிகள் – இரும்பு + ஆணிகள்
கொல்லருலை – கொல்லர் + உலை
தமிழழகு – தமிழ் + அழகு
மலரடி – மலர் + அடி
தேனருவி – தேன் + அருவி
யாதொன்றும் – யாது + ஒன்றும்
பயக்குமெனின் – பயக்கும் + எனின்
புறநானூறு – புறம் + நான்கு + நூறு
மக்கட்கெல்லாம் – மக்கள் + எல்லாம்
பிணியின்மை – பிணி + இன்மை
குலனுடைமை – குலன் + உடைமை
பூங்கோயில் – பூ+ கோயில்
புடைத்தென்னார் – புடைத்து + என்னார்
என்றுருகுவார் – என்று + உருகுவார்
அழுக்கில்லா – அழுக்கு + இல்லா
அறிவுண்டாம் – அறிவு + உண்டாம்
அணிவதாலல்லவோ – அணிவதால் + அல்லவோ
செவ்விதழ் – செம்மை + இதழ்
உடற்குண்டாம் – உடற்கு + உண்டாம்
விலையில்லா – விலை + இல்லா
நேரிங்கே – நேர் + இங்கே
சேமமுற – சேமம் + உற
தேசமெல்லாம் – தேசம் + எல்லாம்
பருவப்பெண் – பருவம் + பெண்
கலம்பகம் – கலம் + பகம்
நெற்கதிர் – நெல் + கதிர்
நிலவுமுண்டோ – நிலவும் + உண்டோ
மண்ணுண்டோ – மண் + உண்டோ
நின்னடி – நின் + அடி
கசடற – கசடு + அற
எழுத்தென்ப – எழுத்து + என்ப
மணற்கேணி – மணல் + கேணி
கற்றறிந்தார் – கற்று + அறிந்தார்
பசும்பொற்சுடர் – பசுமை + பொன் + சுடர்
கண்ணிறைந்த – கண் + நிறைந்த
செயற்கரிய – செயல் + கு + அரிய
பொருட்டன்று – பொருட்டு + அன்று
ஆறுய்த்து – ஆறு + உய்த்து
நட்பன்று – நட்பு + அன்று
செந்தமிழ் – செம்மை + தமிழ்
பேச்சுக்கலை – பேச்சு + கலை
புத்துயிரூட்டி – புதுமை + உயிர் + ஊட்டி
சதுரகராதி – சதுர் + அகராதி
பிணியின்றி – பிணி + இன்றி
அவையஞ்சான் – அவை + அஞ்சான்
மாண்புடையார் – மாண்பு + உடையார்
வேண்டியதில்லை – வேண்டியது + இல்லை
புகழெனக்கு – புகழ் + எனக்கு
குவையெனக்கு – குவை + எனக்கு
தமிழ்ப்பசி – தமிழ் + பசி
செய்தித்தாள் – செய்தி + தாள்
ஓரிடம் – ஓர் + இடம்
தொண்ணூற்றாறு – தொண்ணூறு + ஆறு
தினையளவு – தினை + அளவு
பனையளவு – பனை + அளவு
பசுந்தலை – பசுமை + தலை
மாசிலா – மாசு + இலா
ஈரிருவர் – இரு+ இருவர்
பைங்குவளை – பசுமை + குவளை
செந்தாமரை – செம்மை + தாமரை
இருபதாண்டு – இருபது + ஆண்டு
மின்னணுவியல் – மின் + அணு + இயல்
உள்ளங்கை – உள்ளம் + கை
மேம்பாடைய – மேம்பாடு + அடைய
மின்னஞ்சல் – மின் + அஞ்சல்
மலர்க்கரம் – மலர் + கரம்
குவியுமென்று – குவியும் + என்று
செங்கதிரவன் – செம்மை + கதிரவன்
தாய்மையன்பு – தாய்மை + அன்பு
ஐயாயிரம் – ஐந்து + ஆயிரம்
வேடமணிந்த – வேடம் + அணிந்த
சிறையிலடைத்த – சிறையில் + அடைத்த
தென்னாடு – தெற்கு + நாடு
மெய்ஞ்ஞானம் – மெய் + ஞானம்
உடம்பார் – உடம்பு + ஆர்
ஒன்றுற – ஒன்று + உற
கோலமிட்டு – கோலம் + இட்டு
கதையழகு – கதை + அழகு
ஏட்டிலக்கியம் – ஏடு + இலக்கியம்
நாடகக்கலை – நாடகம் + கலை
நூற்றாண்டு – நூறு + ஆண்டு
தேசியப்பாடல் – தேசியம் + பாடல்
நாடகம் – நாடு + அகம்
சண்பகக்காடு – சண்பகம் + காடு
போதவிழ் – போது + அவிழ்
வளந்தொறும் – வனம் + தொறும்
உயிரென – உயிர் + என
அருந்திறல் – அருமை + திறல்
ஒற்றைக்கால் – ஒற்றை + கால்
காட்டுயிரிகள் – காடு + உயிரிகள்
சிற்றாறு – சிறுமை + ஆறு
புகலிடம் – புகல் + இடம்
விலங்கினம் – விலங்கு + இனம்
ஐம்பூதங்கள் – ஐந்து + பூதங்கள்
வாழிடம் – வாழ் + இடம்
எளிதென்ப – எளிது + என்ப
பண்புடைமை – பண்பு + உடைமை
மக்களொப்பு – மக்கள் + ஒப்பு
பயனுடையார் – பயன் + உடையார்
பண்புடையார் – பண்பு + உடையார்
திருவருட்பா – திரு + அருள் + பா
கண்டபோதெல்லாம் – கண்டபோது + எல்லாம்
பசியறாது – பசி + அறாது
வீடுதோறிரந்தும் – வீடுதோறும் + இரந்தும்
கண்டுளம் – கண்டு + உளம்
வானியல் – வான் + இயல்
வானூர்தி – வான் + ஊர்தி
பழந்தமிழ் – பழைமை + தமிழ்
(சமச்சீர்க் கல்வியில் பழமை + தமிழ் எனக் கொடுக்கப்பட்டுள்ளது.)
திருவுளம் – திரு + உளம்
திருப்புயம் – திரு + புயம்
பெருந்தவம் – பெருமை + தவம்

| | |
|---|---|
| தலைவனென | – தலைவன் + என |
| அரும்பணி | – அருமை + பணி |
| செந்தமிழ்ச்செல்வி | – செம்மை + தமிழ் + செல்வி |
| தமிழன்னை | – தமிழ் + அன்னை |
| தனித்தமிழ் | – தனி + தமிழ் |
| நன்றியுணர்வு | – நன்றி + உணர்வு |
| அமுதகிரணம் | – அமுதம் + கிரணம் |
| பிள்ளைத்தமிழ் | – பிள்ளை + தமிழ் |
| நகைச்சுவை | – நகை + சுவை |
| மண்ணுலகம் | – மண் + உலகம் |
| உள்ளொதுங்கி | – உள் + ஒதுங்கி |
| புத்துணர்ச்சி | – புதுமை + உணர்ச்சி |
| சிற்றிலக்கியம் | – சிறுமை + இலக்கியம் |
| செவிக்குணவு | – செவிக்கு + உணவு |
| சுவையுணரா | – சுவை + உணரா |
| வாயுணர்வு | – வாய் + உணர்வு |
| தந்துய்ம்மின் | – தந்து + உய்ம்மின் |
| வில்லெழுதி | – வில் + எழுதி |
| பூட்டுமின் | – பூட்டு + மின் |
| மருப்பூசி | – மருப்பு + ஊசி |
| மார்போலை | – மார்பு + ஓலை |
| எமதென்று | – எமது + என்று |
| மொய்யிலை | – மொய் + இலை |
| வாயினீர் | – வாயின் + நீர் |
| வெந்துலர்ந்து | – வெந்து + உலர்ந்து |
| காடிதனை | – காடு + இதனை |
| கருமுகில் | – கருமை + முகில் |
| எழுந்தெதிர் | – எழுந்து + எதிர் |
| அறிவுண்டாக | – அறிவு + உண்டாக |
| நாத்தொலைவில்லை | – நா + தொலைவு + இல்லை |
| பிணிநோயுற்றோர் | – பிணி + நோய் + உற்றோர் |
| இயல்பீராறு | – இயல்பு + ஈர் (இரண்டு) + ஆறு |
| நன்மொழி | – நன்மை + மொழி |
| எனக்கிடர் | – எனக்கு + இடர் |
| தொழுதேத்தி | – தொழுது + ஏத்தி |
| உண்டென்று | – உண்டு + என்று |
| நல்லறம் | – நன்மை + அறம் |
| ஒருவற்கு | – ஒருவன் + கு |
| இளிவன்று | – இளிவு + அன்று |
| சால்பென்னும் | – சால்பு + என்னும் |
| கடற்கரை | – கடல் + கரை |
| நாட்டுப்பண் | – நாடு + பண் |
| ஆற்றுமணல் | – ஆறு + மணல் |
| செப்புபட்டயம் | – செம்பு + பட்டயம் |
| ஈண்டினியான் | – ஈண்டு + இனி + யான் |
| காண்டகு | – காண் + தகு |
| சேவடி | – செம்மை + அடி |
| வெவ்விருப்பாணி | – வெம்மை + இரும்பு + ஆணி |
| மற்றிரண்டு | – மற்று + இரண்டு |
| குருசேற்றி | – குருசு + ஏற்றி |
| தன்னரிய | – தன் + அரிய |
| தவிப்பெய்தி | – தவிப்பு + எய்தி |
| இத்தகைய | – இ + தகைய |
| மனநலம் | – மனம் + நலம் |
| இருப்புமுளை | – இரும்பு + முளை |
| ஈண்டிவரே | – ஈண்டு + இவரே |
| எடுத்துரைக்கும் | – எடுத்து + உரைக்கும் |
| பங்கிட்டார் | – பங்கு + இட்டார். |
| எழுத்திட்டார் | – எழுத்து + இட்டார் |
| என்றாகடியமான | – என்று + ஆகடியம் + ஆன |
| ஆரளவு | – அருமை + அளவு |
| கருங்கோல் | – கருமை + கோல் |
| பெருந்தேன் | – பெருமை + தேன் |
| பரிந்தோம்பி | – பரிந்து + ஓம்பி |
| தெரிந்தோம்பி | – தெரிந்து + ஓம்பி |
| வழியொழிகி | – வழி + ஒழுகி |
| எள்ளறு | – எள் + அறு |
| புள்ளறு | – புள்+ அறு |
| அரும்பெறல் | – அருமை + பெறல் |
| பெரும்பெயர் | – பெருமை + பெயர் |
| அவ்வூர் | – அ + ஊர் |
| பெருங்குடி | – பெருமை + குடி |
| புகுந்தீங்கு | – புகுந்து + ஈங்கு |
| பெண்ணணங்கு | – பெண் + அணங்கு |
| நற்றிறம் | – நன்மை + திறம் |
| காற்சிலம்பு | – கால் + சிலம்பு |
| செங்கோல் | – செம்மை + கோல் |
| வெளியுலகில் | – வெளி + உலகில் |
| செந்தமிழ் | – செம்மை + தமிழ் |
| ஊரறியும் | – ஊர் + அறியும் |
| எவ்விடம் | – எ + இடம் |
| அங்கண் | – அம் + கண் |
| பற்பல | – பல + பல |
| புன்கண் | – புன்மை + கண் |
| மென்கண் | – மென் + கண் |
| அருவிலை | – அருமை + விலை |
| நன்கலம் | – நன்மை + கலம் |
| செலவொழியா | – செலவு + ஒழியா |
| வழிக்கரை | – வழி + கரை |
| வந்தணைந்த | – வந்து + அணைந்த |
| எம்மருங்கும் | – எ + மருங்கும் |
| எங்குறைவீர் | – எங்கு + உறைவீர் |
| கண்ணருவி | – கண் + அருவி |
| உடம்பெல்லாம் | – உடம்பு + எல்லாம் |
| திருவமுது | – திரு + அமுது |
| மனந்தழைப்ப | – மனம் + தழைப்ப |
| நற்கறிகள் | – நன்மை + கறிகள் |
| இன்னமுது | – இனிமை + அமுது |
| வாளரா | – வாள் + அரா |
| அங்கை | – அகம் + கை |
| நான்மறை | – நான்கு + மறை |
| விதிர்ப்புற்றஞ்சி | – விதிர்ப்பு + உற்று + அஞ்சி |
| பாவிசை | – பா + இசை |
| நாற்கரணம் | – நான்கு + கரணம் |
| கரணத்தேர் | – கரணத்து + ஏர் |
| நாற்பொருள் | – நான்கு + பொருள் |
| செவியறுத்து | – செவி + அறுத்து |
| இளங்கனி | – இளமை + கனி |
| விண்ணப்பமுண்டு | – விண்ணப்பம் + உண்டு |
| பிணியறியோம் | – பிணி + அறியோம் |
| எந்நாளும் | – எ + நாளும் |
| நாமென்றும் | – நாம் + என்றும் |
| தெண்டிரை | – தெண்மை + திரை |
| பெருக்கெடுத்து | – பெருக்கு + எடுத்து |
| உள்ளுறை | – உள் + உறை |
| நெடுநீர் | – நெடுமை + நீர் |
| அல்வழி | – அ + வழி |
| இருவிழி | – இரண்டு + விழி |
| வெள்ளெயிறு | – வெண்மை + எயிறு |
| கரிக்கோடு | – கரி + கோடு |
| பெருங்கிரி | – பெருமை + கிரி |
| எண்கினங்கள் | – எண்கு + இனங்கள் |
| வீழ்ந்துடல் | – வீழ்ந்து + உடல் |
| மாதிரத்துறை | – மாதிரத்து + உறை |
| செங்கதிர் | – செம்மை + கதிர் |
| பெருவரி | – பெருமை + வரி |
| பெருஞ்சிரம் | – பெருமை + சிரம் |
| தண்டளிர்ப் பதம் | – தண்மை + தளிர் + பதம் |
| திண்டிறல் | – திண்மை + திறல் |
| சிரமுகம் | – சிரம் + முகம் |
| பணிந்தவர் | – பணிந்து + இவர் |
| அன்பெனப்படுவது | – அன்பு + எனப்படுவது |
| பண்பெனப்படுவது | – பண்பு + எனப்படுவது |
| பற்றில்லேன் | – பற்று + இல்லேன் |
| போன்றிருந்தேன் | – போன்று + இருந்தேன் |
| மகிழ்ச்சியடைந்தான் | – மகிழ்ச்சி + அடைந்தான் |
| ஒலியெழுப்பி | – ஒலி + எழுப்பி |
| படைத்தளபதி | – படை + தளபதி |

| | | |
|---|---|---|
| பூலோகமெல்லாம் | – | பூலோகம் + எல்லாம் |
| வைத்திருந்தனர் | – | வைத்து + இருந்தனர் |
| வீதியெங்கும் | – | வீதி + எங்கும் |
| புத்துணர்ச்சி | – | புதுமை + உணர்ச்சி |
| தண்ணீர் | – | தண்மை + நீர் |
| வெண்புகை | – | வெண்மை + புகை |
| மரத்தூள் | – | மரம் + தூள் |
| மழையாகுமே | – | மழை + ஆகுமே |
| உலகூட்டும் | – | உலகு + ஊட்டும் |
| அந்நாளும் | – | அ + நாளும் |
| தொலைக்காட்சி | – | தொலை + காட்சி |
| பிறப்பெடுத்தேன் | – | பிறப்பு + எடுத்தேன் |
| மறந்துன்னை | – | மறந்து + உன்னை |
| சிறப்படைந்தேன் | – | சிறப்பு + அடைந்தேன் |
| கரையோரம் | – | கரை + ஓரம் |
| அங்கெல்லாம் | – | அங்கு + எல்லாம் |
| இரண்டெடுத்து | – | இரண்டு + எடுத்து |
| பழச்சாறு | – | பழம் + சாறு |
| பல்லாண்டு | – | பல + ஆண்டு |
| செயலாக்கம் | – | செயல் + ஆக்கம் |
| பெரும்படை | – | பெருமை + படை |
| பெருவெள்ளம் | – | பெருமை + வெள்ளம் |
| வியனுலகம் | – | வியன் + உலகம் |
| நிறையுடைமை | – | நிறை + உடைமை |
| நெடிதுயர்ந்து | – | நெடிது + உயர்ந்து |
| அவ்வுருவம் | – | அ + உருவம் |
| நினைவகம் | – | நினைவு + அகம் |
| இன்னலம் | – | இனிமை + நலம் |
| கனியிடை | – | கனி + இடை |
| நற்றமிழ் | – | நன்மை + தமிழ் |
| கருங்கடல் | – | கருமை + கடல் |
| நானூறு | – | நான்கு + நூறு |
| மற்போர் | – | மல் + போர் |
| காலாட்படை | – | கால் + ஆள் + படை |
| நிறைந்தறம் | – | நிறைந்து + அறம் |
| அழைப்பிதழ் | – | அழைப்பு + இதழ் |
| நன்றென்றல் | – | நன்று + என்றல் |
| பொற்காசு | – | பொன் + காசு |
| அமுதென்று | – | அமுது + என்று |
| செம்பயிர் | – | செம்மை + பயிர் |
| செந்தமிழ் | – | செம்மை + தமிழ் |
| பொய்யகற்றும் | – | பொய் + அகற்றும் |
| இடப்புறம் | – | இடம் + புறம் |
| சீரிளமை | – | சீர்மை + இளமை |
| வெண்குடை | – | வெண்மை + குடை |
| பொற்கோட்டு | – | பொன் + கோட்டு |
| நன்மாடங்கள் | – | நன்மை + மாடங்கள் |
| நிலத்தினிடையே | – | நிலத்தின் + இடையே |

| | | |
|---|---|---|
| தட்பவெப்பம் | – | தட்பம் + வெப்பம் |
| வேதியுரங்கள் | – | வேதி + உரங்கள் |
| கண்டறி | – | கண்டு + அறி |
| ஒப்வற | – | ஒப்வு + அற |
| ஆழக்கடல் | – | ஆழம் + கடல் |
| விண்வெளி | – | விண் + வெளி |
| நின்றிருந்த | – | நின்று + இருந்த |
| இடமெல்லாம் | – | இடம் + எல்லாம் |
| மாசற | – | மாசு + அற |
| கைப்பொருள் | – | கை + பொருள் |
| குணமிருந்தால் | – | குணம் + இருந்தால் |
| பசியின்றி | – | பசி + இன்றி |
| படிப்பறிவு | – | படிப்பு + அறிவு |
| நன்றியறிதல் | – | நன்றி + அறிதல் |
| பொறையுடைமை | – | பொறை + உடைமை |
| பாட்டிசைத்து | – | பாட்டு + இசைந்து |
| கண்ணுறங்கு | – | கண் + உறங்கு |
| போகிப்பண்டிகை | – | போகி + பண்டிகை |
| பொருளுடைமை | – | பொருள் + உடைமை |
| கல்லெடுத்து | – | கல் + எடுத்து |
| நானிலம் | – | நான்கு + நிலம் |
| கதிர்ச்சுடர் | – | கதிர் + சுடர் |
| மூச்சடக்கி | – | மூச்சு + அடக்கி |
| மின்னணு | – | மின் + அணு |
| விரிவடைந்த | – | விரிவு + அடைந்த |
| நூலாடை | – | நூல் + ஆடை |
| தானென்று | – | தான் + என்று |
| எளிதாகும் | – | எளிது + ஆகும் |
| பாலையெல்லாம் | – | பாலை + எல்லாம் |
| குரலாகும் | – | குரல் + ஆகும். |
| இரண்டல்ல | – | இரண்டு + அல்ல |
| தந்துதவும் | – | தந்து + உதவும் |
| காடெல்லாம் | – | காடு + எல்லாம் |
| பெயரறியா | – | பெயர் + அறியா |
| மனமில்லை | – | மனம் + இல்லை |
| காட்டாறு | – | காடு + ஆறு |
| அனைத்துண்ணி | – | அனைத்து + உண்ணி |
| யாதெனின் | – | யாது + எனின் |
| யாண்டுளனோ | – | யாண்டு + உளனோ |
| பூட்டுங்கதவுகள் | – | பூட்டும் + கதவுகள் |
| தோரணமேடை | – | தோரணம் + மேடை |
| ஏடெடுத்தேன் | – | ஏடு + எடுத்தேன் |
| துயின்றிருந்தார் | – | துயின்று + இருந்தார் |
| வாய்த்தீயின் | – | வாய்த்து + ஈயின் |
| கேடில்லை | – | கேடு + இல்லை |
| உயர்வடைவோம் | – | உயர்வு + அடைவோம் |
| வனப்பில்லை | – | வனப்பு + இல்லை |
| வண்கீரை | – | வண்மை + கீரை |

| | | |
|---|---|---|
| கோட்டோவியம் | – | கோடு + ஓவியம் |
| செப்பேடு | – | செப்பு + ஏடு |
| எழுத்தென்ப | – | எழுத்து + என்ப |
| கரைந்துண்ணும் | – | கரைந்து + உண்ணும் |
| நீருலையில் | – | நீர் + உலையில் |
| தேர்ந்தெடுத்து | – | தேர்ந்து + எடுத்து |
| ஞானச்சுடர் | – | ஞானம் + சுடர் |
| இன்சொல் | – | இனிமை + சொல் |
| நாடென்ப | – | நாடு + என்ப |
| மலையளவு | – | மலை + அளவு |
| தன்னாடு | – | தன் + நாடு |
| தானொரு | – | தான் + ஒரு |
| எதிரொலித்தது | – | எதிர் + ஒலித்தது |
| என்றென்றும் | – | என்று + என்றும் |
| வானமளந்தது | – | வானம் + அளந்தது |
| இருதிணை | – | இரண்டு + திணை |
| ஐம்பால் | – | ஐந்து + பால் |
| நன்செய் | – | நன்மை + செய் |
| நீளுழைப்பு | – | நீள் + உழைப்பு |
| விழுந்ததங்கே | – | விழுந்தது + அங்கே |
| செத்திறந்த | – | செத்து + இறந்த |
| இன்னோசை | – | இனிமை + ஓசை |
| வல்லுருவம் | – | வன்மை + உருவம் |
| இவையுண்டார் | – | இவை + உண்டார் |
| நலமெல்லாம் | – | நலம் + எல்லாம் |
| கலனல்லால் | – | கலன் + அல்லால் |
| கோயிலப்பா | – | கோயில் + அப்பா |
| கனகச்சுனை | – | கனகம் + சுனை |
| பாடறிந்து | – | பாடு + அறிந்து |
| மட்டுமல்ல | – | மட்டும் + அல்ல |
| கண்ணோடாது | – | கண் + ஓடாது |
| கசடற | – | கசடு + அற |
| அக்களத்து | – | அ + களத்து |
| வாசலெல்லாம் | – | வாசல் + எல்லாம் |
| பெற்றெடுத்தோம் | – | பெற்று + எடுத்தோம் |
| வெங்கரி | – | வெம்மை + கரி |
| என்றிருள் | – | என்று + இருள் |
| சீவனில்லாமல் | – | சீவன் + இல்லாமல் |
| விலங்கொடித்து | – | விலங்கு + ஒடித்து |
| நமனில்லை | – | நமன் + இல்லை |
| ஆனந்தவெள்ளம் | – | ஆனந்தம் + வெள்ளம் |
| பெருஞ்செல்வம் | – | பெருமை + செல்வம் |
| ஊராண்மை | – | ஊர் + ஆண்மை |
| இன்பதுன்பம் | – | இன்பம் + துன்பம் |
| விழித்தெழும் | – | விழித்து + எழும் |
| போவதில்லை | – | போவது + இல்லை |
| படுக்கையாகிறது. | – | படுக்கை + ஆகிறது |
| எந்தமிழ்நா | – | எம் + தமிழ் + நா |

SURA'S

| | |
|---|---|
| கொள்ளை | திருடுதல், மிகுதி |
| கோலம் | அழகு, அலங்காரம் |
| கோளம் | உருண்டை, வட்டம் |
| கோலை | மிளகு |
| கோழை | வீரமற்றவன், கபம் |
| கோளை | குவளை, எலி |
| கோல் | மரக்கொம்பு, அம்பு, தண்டு, யாழ்நரம்பு |
| கோள் | கிரகம் |
| கோலி | இலந்தை, விளையாடும் குண்டு |
| கோழி | உறையூர், விட்டில் பூச்சி, பறவை |
| கோளி | பூவாது காய்க்கும் மரம், ஆத்தி, ஆலம் |
| சலம் | நீர், சிறுநீர், குளிர் |
| சளம் | பொய், துன்பம், வஞ்சனை |
| சாலை | பாடசாலை, பொது மண்டபம், அறக்கூடம், போக்குவரத்து பாதை |
| சாளை | கடல்மீன் |
| சாழை | குடிசை |
| சுழித்தல் | சுழலுதல் |
| சுளித்தல் | முறித்தல் |
| சூலை | வயிற்று நோய் |
| சூளை | செங்கல் சூளை |
| சூல் | கர்ப்பம் |
| சூழ் | சூழ்ந்துகொள், சுற்று |
| சூள் | சபதம் |
| சேல் | மீன் |
| சேள் | மேலிடம் |
| சோலி | ரவிக்கை, காரியம் |
| சோழி | பலகரை, விளையாட்டுப் பொருள் |
| சோளி | கூடை வகை |
| தவலை | பாத்திரம் |
| தவளை | ஓர் உயிரினம் |
| தலம் | இடம், பூமி |
| தழும் | தைலம் |
| தளம் | மேடை, மாடி வீட்டின் அடுக்கு |
| தழை | தாவர உறுப்பு |
| தலை | சிரம் |
| தளை | விலங்கு, கட்டு |
| தாலம் | உலகம், தேன் |
| தாளம் | இசைக்கருவி, ஜதி |
| தாலி | மங்கல நாண் |
| தாழி | கடல், குடம், பரணி, பெரிய பாண்டம் |
| தாளி | தாளித்தல், ஒருவகை மரம் |
| தால் | நாக்கு, தாலாட்டு |
| தாழ் | தாழ்தல், குனிதல் |
| தாள் | முயற்சி, பாதம், ஆதி, படி, காகிதம் |

| | |
|---|---|
| துலக்கம் | ஒளி, தெளிவு |
| துளக்கம் | அசைவு, கலக்கம் |
| துலம் | கோரை |
| துளம் | மாதுளை, மயிலிறகு |
| துலி | பெண் ஆமை |
| துழி | பள்ளம் |
| துளி | மழைத்துளி, திவலை, சிறிய அளவு |
| துலை | ஒப்பு, கனம் |
| துளை | துவாரம், வாயில் |
| துலி | எழுதுகோல், எழுத்தாணி |
| துளி | புழுதி, குதிரை |
| தெழித்தல் | கோபித்தல், நீக்குதல், ஆரவாரித்தல் |
| தெளித்தல் | விதைத்தல் |
| தெல் | அஞ்சுதல் |
| தெள் | தெளிவான |
| தோலன் | அற்பன் |
| தோழன் | நண்பன் |
| தோலி | பிசின், ஒருவகை மீன் |
| தோழி | பாங்கி, நட்பு கொண்டவள் |
| தோளி | அவுரி, அரக்கு |
| தோல் | சருமம், வனப்பு, விதையின் மேல்பகுதி |
| தோள் | புயம், வீரம் |
| நலன் | நலம், அழகு, புகழ், நன்மை, இன்பம் |
| நளன் | தமயந்தியின் கணவன் (அரசன்) |
| நலி | நோய் |
| நளி | குளிர்ச்சி, பெருமை |
| நலிதல் | நலிந்து போதல் |
| நளிதல் | செறிதல் |
| நல் | நல்ல |
| நள் | இரவு, நள்ளிரவு |
| நாலம் | பூவின் காம்பு |
| நாழம் | இழிவுரை |
| நாளம் | பூத்தண்டு, ரத்த நாளம் |
| நாலி | முத்து, கந்தையாடை |
| நாழி | ஒரு படி (முகத்தல் அளவைக் கருவி), ஏர், நாடா, அம்பறாத்துணி |
| நாளி | கல், நாய் |
| நாலிகை | மூங்கில் |
| நாழிகை | வட்டம், நேரக்கணக்கு |
| நால் | நான்கு |
| நாழ் | குற்றம், செருக்கு |
| நாள் | காலம், திதி |
| நீலம் | நிறம், கருங்குவளை |
| நீளம் | நெடுமை, தாமதம் |
| நீல் | நீலம், காற்று |

| | |
|---|---|
| நீள் | நீளம், ஒளி |
| பலம் | சக்தி, உறுதி, வன்மை, எடை |
| பழம் | கனி, முதுமை |
| பல்லி | ஓர் உயிரி, சிற்றூர், உழு கருவி |
| பள்ளி | இடைச்சேரி, புத்தர் கோயில், மருத நிலத்தூர், படுக்கை, பள்ளிக்கூடம் |
| பலி | பலியிடுதல் |
| பழி | குற்றம் |
| பால் | திரவ உணவு, பகுப்பு, இயல்பு |
| பாழ் | வீண், வெறுமை |
| பீழை | துன்பம் |
| பீளை | கண் அழுக்கு |
| புலி | காட்டு விலங்கு |
| புளி | புளிய மரம் |
| புலை | புலால், ஊன், கீழ்மை |
| புழை | துளை, வாயில், நரகம் |
| புகல் | அடைக்கலம் |
| புகழ் | பெருமை |
| புல் | அற்பம், புல்பூண்டு |
| புள் | பறவை |
| பூலம் | புற்கட்டு |
| பூளம் | பூவரசு |
| பொலிதல் | செழித்தல் |
| பொழிதல் | ஈதல், சொரிதல் |
| மலை | குன்று, பொருப்பு, வெற்பு, சிகரம் |
| மழை | மழைநீர் |
| மலைத்தல் | வியத்தல், தடுமாறுதல் |
| மழைத்தல் | குளிர்ந்திருத்தல் |
| மாலை | அந்திப்பொழுது, பூமாலை |
| மாளை | புளியம்பட்டை |
| மாழை | மயக்கம், அழகு |
| மால் | திருமால் |
| மாள் | இறத்தல் |
| முலை | உடலின் ஓர் உறுப்பு |
| முளை | தறி, ஆப்பு, அங்குசம், தண்டு, முளைத்தல், மூங்கில் |
| முழை | குகை |
| மூலை | இருகோடுகள் சந்திக்கும் இடம் |
| மூளை | தலைக்குள் இருக்கும் ஓர் உறுப்பு |
| மாலி | கிரீடம் |
| மாழி | கலப்பை |
| மாளி | துணி மூட்டை |
| வலம் | சுற்றுதல், வலப்பக்கம், வெற்றி |
| வளம் | வளமை, அழகு |
| வலவன் | திருமால் |
| வளவன் | சோழன் |
| வலி | நோய், வேதனை |
| வழி | பாதை, நெறி, தடம், உபாயம் |
| வளி | காற்று |
| வலை | மீன் பிடிக்கும் கருவி |
| வழை | சுரபுன்னை, புதுமை, இளமை |
| வளை | கைவளையல், எலி வளை |
| வல்லி | பூமி, படர்கொடி |
| வள்ளி | வள்ளியம்மை, ஆபரணம், சந்திரன் |
| வலு | வலிமை |
| வழு | குற்றம் |
| வளு | இளமை |
| வாலி | கிஷ்கிந்தை அரசன் |
| வாழி | 'வாழ்க' என வாழ்த்துதல் |
| வாளி | வட்டவாள், வீரன், ஒரு காதணி |
| வாலை | இளம்பெண், திராவகம், வடிக்கும் பாத்திரம் |
| வாழை | வாழை மரம் |
| வாளை | வாளை மீன் |
| வால் | விலங்குகளின் ஓர் உறுப்பு |
| வாழ் | வாழ்வாயாக |
| வாள் | போர்வாள், நீண்ட கத்தி |
| விலா | விலா எலும்பு |
| விழா | திருவிழா, பண்டிகை |
| விளா | இளமை, வெண்மை, நிணம் |
| விழி | கண் விழி, விழித்தல் |
| விளி | கூப்பிடு, அழை, ஏழிசையில் ஒன்று |
| விலை | மதிப்பு |
| விழை | விரும்பு |
| விளை | ஒரு மீன் வகை, விளைவித்தல் |
| விலக்கு | விலக்கி விடு, தவிர் |
| விளக்கு | தீபம், விளக்கமாகச் சொல் |
| விலங்கு | பூட்டு, மிருகம் |
| விளங்கு | திகழ் |
| வெல்லம் | கருப்பட்டி |
| வெள்ளம் | மிதமிஞ்சிய நீர் |
| வேலம் | வேல மரம், தோட்டம் |
| வேழம் | யானை, கரும்பு, மூங்கில் |
| வேல் | வேலாயுதம் |
| வேள் | வேளிர் குலத்தவன், முருகக் கடவுள் |
| வேலை | தொழில் |
| வேளை | பொழுது, நேரம் |
| ஆலி | மழைத்துளி |
| ஆளி | சிங்கம் |
| ஆழி | கடல், மோதிரம் |

SURA'S

# பொருள்வேறுபாட்டை உணர்ந்து வாக்கியத்தில் அமைக்க.

## ண - ன வேறுபாடுகள்

| | வினா | விடை |
|---|---|---|
| 1. | துணி | ஆடை<br>என் அப்பா பொங்கலுக்காகப் புதுத்துணி வாங்கத் துணிக்கடைக்குச் சென்றார். |
| | துனி | கோபம்<br>நம் முதல் எதிரியே துனிதான். |
| 2. | பணி | வேலை<br>நாட்டுப்பணியில் நாட்டம் கொள்ள வேண்டும். |
| | பனி | குளிர்ச்சி<br>இமயமலை பனிமலையாகும். |
| 3. | தினை | ஒரு தானியம்<br>தினைமாவுடன் தேனைச் சேர்த்து சாப்பிடுவது உடலுக்கு நல்லது. |
| | திணை | பிரிவு<br>புறத்திணை, அகத்திணை எனத் திணைகள் இருவகைப்படும். |
| 4. | அரண் | பாதுகாப்பு<br>அதியமான் நாட்டில் மலைகளே அரணாக அமைந்திருந்தன. |
| | அரன் | சிவபெருமான்<br>சைவர்கள் அரனை வழிபடுவார்கள். |
| 5. | மனம் | உள்ளம்<br>மனதில் உறுதி வேண்டும். |
| | மணம் | வாசனை<br>மலர்களின் மணம் அனைவருக்கும் பிடிக்கும். |
| 6. | ஆனை | யானை<br>காடுகளை அழிப்பதால் ஆனைகள் ஊருக்குள் வருகின்றன. |
| | ஆணை | கட்டளை<br>கடைகளுக்குத் தமிழிலே பெயர் சூட்ட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. |
| 7. | ஆனி | ஒரு தமிழ் மாதம்<br>மதுரையில் ஆனி மாதத்தில் ஊஞ்சல் திருவிழா நடைபெறும். |
| | ஆணி | கூரிய இரும்புத்துண்டு<br>சுவரில் நிறைய ஆணிகளை அடிக்கக்கூடாது. |
| 8. | நான் | தன்மை இடத்தைச் சுட்டும் சொல்<br>நான் எல்லோரிடமும் அன்பாகப் பேசுவேன். |
| | நாண் | கயிறு : காளைகளை வண்டியில் இணைக்க நாண் வேண்டும். |
| 9. | கான் | காடு<br>பலவகையான மரங்கள் செறிந்த இடம் கான் ஆகும். |
| | காண் | பார்<br>இயற்கைக் காட்சியைக் காண்பது மனதிற்கு இனிமை தரும். |
| 10. | அண்ணம் | மேல்வாய் : அண்ணத்தை நா வருடியது. |
| | அன்னம் | ஒரு பறவை<br>அன்னப்பறவை பறவை இனத்தில் ஒன்று. |
| 11. | உண் | சாப்பிடு<br>காலையில் உண்ணாமல் இருக்கக் கூடாது. |
| | உன் | முன்னிலையைக் குறிக்கும் சொல்<br>உன் வீடு எங்குள்ளது? |
| 12. | ஊண் | உணவு : சத்துள்ள ஊண்களை உண்ணவேண்டும். |
| | ஊன் | இறைச்சி : ஊன் உணவைத் தவிர்த்தல் சிறந்தது. |
| 13. | எண்ண | எண்ணிப்பார்க்க, நினைக்க :<br>சிறுவன் தன்னிடம் உள்ள மிட்டாய்களை எண்ணிப் பார்த்தான்.<br>புதுப்பணக்காரன் தன் பழைய நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். |
| | என்ன | வினாச்சொல்<br>பாரதியாரின் இயற்பெயர் என்ன? |

### ல - ள - ழ : வேறுபாடுகள்

| | வினா | விடை |
|---|---|---|
| 1. | உலை | கொல்லர் உலை<br>படைக்கருவிகள் உலைக்களத்தில் உருவாக்கப்பட்டன. |
| | உளை | பிடரிமயிர்<br>குதிரைகளின் உளை அழகாக இருக்கும். |
| | உழை | உழைப்பு, பாடுபடுதல்<br>கடும் உழைப்பு வெற்றியைத் தரும். |
| 2. | இலை | தாவரங்களின் ஓர் உறுப்பு<br>செடிக்குத் தண்ணீர் ஊற்றாதலால் இலைகள் காய்ந்து சருகாகிவிட்டன. |
| | இளை | மெலிதல்<br>கண்ணன் உடல் நலமின்மையால் இளைத்துப்போய்விட்டான். |
| | இழை | நூல்இழை : பட்டுநூல் இழை மிருதுவாக இருக்கும். |
| 3. | வாழை | மரவகை<br>வாழைமரங்களில் பலவகை உண்டு. |
| | வாலை | இளம்பெண்<br>வாலைப்பெண்கள் ஒப்பனை செய்துகொள்வதில் நாட்டம் கொள்வர். |
| | வாளை | மீன்வகை : வாளைமீன் நீளமாக இருக்கும். |
| 4. | வேலை | பணி<br>இளைஞர்கள் அனைவரும் வேலை வாய்ப்பினைப் பெறவேண்டும். |
| | வேளை | பொழுது<br>கண்ணன் உணவு இடைவேளையைக் கூட வீணாக்கமாட்டான் |
| 5. | கிலி | பயம்<br>இருட்டைக் கண்டு கிலி கொள்வாரும் உண்டு. |
| | கிளி | பறவை வகை<br>சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை. |
| | கிழி | துண்டாக்க<br>புத்தாடை ஆணியில் மாட்டிக் கிழிந்துவிட்டது. |

SURA'S

| | வினா | விடை |
|---|---|---|
| 6. | மலை | பாறைகளின் தொகுதி<br>ஒரு நாட்டிற்கு இயற்கை அரணாக இருப்பது மலையாகும். |
| | மழை | வானத்தில் இருந்துவரும் நீர்<br>மழை வளத்தால்தான் ஒரு நாடு செழிப்புடன் இருக்க முடியும். |
| 7. | களை | வேண்டாத செடிகள்<br>பயிர்களில் உள்ள களைகளை எடுத்தல் அவசியம். |
| | கலை | வித்தை<br>ஓவியக்கலை, சிற்பக்கலை போன்றவை நுண்கலைகள் ஆகும். |
| | கழை | மூங்கில் : கழை புல்வகையைச் சேர்ந்தது. |
| 8. | அலை | கடல் அலை<br>கடலில் அலைகள் ஓய்வதில்லை. |
| | அளை | புற்று<br>அளையில் பாம்புகள் இருக்கும். |
| | அழை | கூப்பிடு<br>அம்மா குழந்தையை அழைத்தாள். |
| 9. | வலி | துன்பம்<br>நான் பல்வலியால் அவதிப்பட்டேன். |
| | வளி | காற்று<br>தெற்குத் திசையிலிருந்து வரும் வளியைத் தென்றல் என்பர். |
| | வழி | செல்லும் வழி<br>நாம் செல்லும் வழியில் மரங்கள் நடவேண்டும். |
| 10. | தலை | உடல் உறுப்பு<br>இரு சக்கரவாகனத்தில் செல்லும்போது தலையில் தலைக்கவசம் அணிவது சிறந்தது. |
| | தளை | கட்டு<br>நாட்டின் அடிமைத்தளையை அகற்றுவதற்குத் தியாகிகள் பலர் போராடினர். |
| | தழை | இலை<br>இயற்கை வேளாண்மைக்குத் தழை உரம் இடுவர். |
| 11. | வலை | மீன்பிடி வலை<br>மீனவர்கள் வலைகளில் மீனைப் பிடித்தனர். |
| | வளை | துளை, வளைத்தல்<br>எலி வளைகளில் தங்கும்.<br>திருடனைக் காவலர்கள் வளைத்துப் பிடித்தனர். |
| | வழை | புன்னைமரம்<br>வழை என்பது சுர புன்னை மரம் ஆகும். |
| 12. | வால் | விலங்குகளின் உறுப்பு<br>நாயின் வாலை நிமிர்த்த முடியாது. |
| | வாள் | கத்தி<br>ஓர் உறைக்குள் ஒரு வாள்தான் இருக்க வேண்டும். |
| 13. | காலை | காலைப்பொழுது<br>காலையில் கதிரவன் கிழக்குத்திசையில் தோன்றும். |
| | காளை | எருது<br>உழவர்கள் காளைகளைக் கொண்டு நிலத்தை உழுவர். |

| | வினா | விடை |
|---|---|---|
| 14. | உலவு | நட<br>காலையும் மாலையும் உலவுதல் சிறந்த உடற்பயிற்சி ஆகும். |
| | உளவு | ஒற்று<br>குமரன் உளவுத்துறையில் பணிக்குச் சேர்ந்துள்ளான். |
| | உழவு | நில உழவு<br>உழவுத் தொழிலே மிகச் சிறந்த தொழில். |
| 15. | ஒலி | இரைச்சல் : மருத்துவமனையின் அருகில் 'ஒலி எழுப்பாதே' என்ற அடையாளக் குறியீடு இருக்கும். |
| | ஒளி | வெளிச்சம்<br>கண்ணன் மெழுகுவர்த்தியின் ஒளியில் படித்தான். |
| | ஒழி | இல்லாமல் செய்<br>போரில் படைவீரர்கள் போரிட்டுப் பகைவரை ஒழித்தனர் |

**ர – ற : வேறுபாடுகள்**

| | வினா | விடை |
|---|---|---|
| 1. | இரை | உணவு<br>குருவி இரையைத் தேடி அலைந்தது. |
| | இறை | இறைவன்<br>மக்கள் அனைவரும் இறைவனை வழிபடுவர். |
| 2. | கரி | யானை<br>மதகரி மோதி மரம் வீழ்ந்தது. |
| | கறி | காய்கறி<br>காய்கறிகள் உடலுக்கு நல்லவையாகும். |
| 3. | உரவு | வலிமை<br>பழங்கால மன்னர்கள் உரவு மிக்கவர்கள். |
| | உறவு | சொந்தம்<br>நாம் நம் உறவுகளை மதிக்க வேண்டும். |
| 4. | அரை | பாதி<br>ஒன்றில் பாதி அரையாகும். |
| | அறை | வீட்டின் பகுதி<br>வரவேற்பரையில் புதிய தொலைக்காட்சிப் பெட்டியை வைத்துள்ளோம். |
| 5. | அரம் | ஒரு கருவி<br>மரத்தை அருக்க அரம் தேவை. |
| | அறம் | தருமம்<br>அறம் செய்வது சாலச்சிறந்தது. |

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு பெயர்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கயம் | 8. | வாரணம் | 15. | ஆனை |
| 2. | வேழம் | 9. | அஞ்சனாவதி | 16. | இபம் |
| 3. | களிறு | 10. | அத்தி | 17. | இரதி |
| 4. | பிளிறு | 11. | அத்தினி | 18. | குஞ்சரம் |
| 5. | களபம் | 12. | அரசுவா | 19. | வல்விலங்கு |
| 6. | மாதங்கம் | 13. | அல்லியன் | 20. | கரி |
| 7. | கைம்மா | 14. | அனுபமை | 21. | அஞ்சனம் |

**இதழ் என்னும் சொல்லின் வேறு பொருள்கள் :**

பூவின் இதழ், கண்ணிமை, பனையேடு, நாளிதழ் போன்றவையாகும்.

**கடல் என்பதனைக் குறிக்கும் வேறுபெயர்கள் :**

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி .

**மரக்கலத்தின் வேறுபெயர்கள் :**

கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில் , அம்பி, வங்கம், மிதவை, பஃறி , ஓடம்.

**மலையைக் குறிக்கும் வேறுசொற்கள் :**

வெற்பு, சிலம்பு, பொருப்பு

**இரக்கத்தைக் குறிக்கும் வேறுசொற்கள் :**

அருள், பரிவு, கருணை

**கிளியைக் குறிக்கும் வேறுசொற்கள் :**

தத்தை, சுகம், கிள்ளை.

**மிகுதி என்ற ஒரே பொருளைத் தரும் உரிச்சொற்கள் :**

சால, உறு, தவ , நனி, கூர், கழி.

கடி என்னும் ஒரே உரிச்சொல் 13 வகையான பொருள்களைத் தருகிறது. அவையாவன : காவல், கூர்மை, விரை ( வாசனை) , விளக்கம் (பிரகாசம்), அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஆர்த்தல் (ஒலித்தல்), வரைவு (நீக்கல்), மன்றல் (திருமணம்), கரிப்பு.

1. கடிநகர் – காவல் உடைய நகரம் (காவல்)
2. கடிநுனைப் பகழி – கூர்மையான அம்பு (கூர்மை)
3. கடிமாலை – நறுமணமுள்ள மாலை ( வாசனை)
4. கடிமார்பன் – விளக்கம் பொருந்திய மார்பன் (விளக்கம்)
5. கடி யாமம் காக்கும் கைவிளக்கு – அச்சம் தரும் யாமத்திற்கு துணையாக உள்ள கைவிளக்கு, (அச்சம்)
6. கடி அரண் – வலிமையான கோட்டை என்பது பொருள். இங்குக் கடி என்பது சிறப்பு என்ற பொருளில் அமைந்துள்ளது.
7. கடிவிடுதும் – விரைவில் விடுதும் (விரைவு)
8. கடி உணவு – மிகுதியான உணவு (மிகுதி)
9. கடிமணச் சாலை – புதுமையான மணம் நிறைந்த இடம் (புதுமை)
10. கடி முரசு – ஒலிக்கும் முரசு (ஒலி)
11. கடி மது நுகர்வு – விலக்கத்தக்க மதுவை அருந்துதல் (வரைவு)
12. கடிவினை முடுகு இனி – திருமணத்தை விரைந்து நிகழ்த்து ( மன்றல்)
13. கடி மிளகு – காரமான மிளகு (கரிப்பு)

சொல் என்ற பொருளைக் குறிக்க நன்னூலார் 16 உரிச்சொற்களைக் கூறியுள்ளார்.

**மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை**
**கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே – நன்னூல் 458.**

மாற்றம், நுவல்தல், செப்புதல்; உரைத்தல், கரை, நொடி, இசைத்தல், கூற்று, புகறல், மொழிதல், கிளவி, விளம்புதல், அறைகுதல், பாட்டு, பகர்ச்சி, இயம்பல் ஆகியனவாகும்.

ஓசை என்ற ஒரே பொருளைத் தரும் பல உரிச் சொற்களாவன: முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை , பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கௌவை , கம்பலை, அரவம், ஆர்ப்பு.

**காடு என்ற பொருளைத் தரும் பல சொற்கள் :**

1. வல்லை – பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கியுள்ள காடு.
2. இறும்பு, குறுங்காடு – சிறுமரங்கள் மிடைந்த காடு.
3. அரில், அறல், பதுக்கை – சிறு தூறுகள் பம்பின காடு.
4. முதை – மிகவும் முதிர்ந்த முற்றிப் போன மரங்களை உடைய காடு.
5. பொச்சை, சுரம், பொதி – மரங்கள் கரிந்து போன காடு.
6. கணையம், மிளை, அரண் – அரசனது காவலில் உள்ள காடு.
7. பழவம் – முதிர்ந்த மரங்கள் நிறைந்த காடு.
8. முளரி – இடர் மிகுந்த காடு.
9. வல்லை – அடர்ந்த காடு.
10. வியல் – விரிந்து பரந்த காடு.

# தமிழரின் சொல்வளம்

**மலை இடப்பெயர்கள்**

திராவிடர் அடிப்படையில் மலைவாழ் மக்கள். திராவிடர்களை '**மலை நில மனிதர்கள்**' என்று கமில்சுவலபில் குறிப்பிடுகிறார். இந்தியாவின் வடக்கு, மேற்கு, கிழக்கு மாநில இடப்பெயர்களில் திராவிட இடச் சொற்களின் நேரடித் தொடர்பு இன்று வரை நீடிக்கிறது.

**வடமேற்கு இந்தியாவில் திராவிட மலைப்பெயர்கள்:**

சமஸ்கிருத மொழியில் 'மலய' என்று வழங்கப்படுகிறது. வடமொழியில் 'மலய' என்ற சொல் மலபாருக்கு மேற்கேயுள்ள மலைகளைக் குறிக்கிறது. 'மலயத்துவஜ பாண்டியன்' என்ற மன்னனின் பெயர் 'மலய' என்ற சொல்லின் திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.

**மலைக் குடியிருப்புகள்:** நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை எழுப்பியுள்ளனர். குறும்பர் மொழியில் தாழ்வாரத்தைக் குறிக்கும் சொல் மெட்டு. ஆந்திராவிலும் ஒடிஸாவிலும் உள்ள 'ஜதாப்பு' எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் மலையுச்சிகளில் அமைந்துள்ளன.

**தென்னிந்தியாவில் 'மலை' என்ற இடப்பெயரின் சிறப்பிடம்:** தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பொயர்களில் **முன்னொட்டாகவும்** 84 இடப்பெயர்களில் **பின்னொட்டாகவும்** அமைந்துள்ளன. ஆந்திர மாநிலத்தில் 'மல்' என்ற வேர்ச்சொல் ஐகார ஈற்றிற்குப் பதிலாக ஆகார ஈறு பெற்று 'மலா' என்று வழங்கப்படுகிறது. கர்நாடகாவில் 'மலே' என்ற சொல் 15 இடப்பெயர்களிலும் 'மலை' என்ற சொல் ஒரு இடத்திலும் (தோணிமலை) இடம்பெறுகிறது. கேரள மாநிலத்தில் 10 இடங்களில் 'மலை' விகுதிப்பெயராக அமைந்துள்ளன. **'மலை' என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்:** உத்திராஞ்சல் – சமோலி, ஜார்கண்ட் – கும்லா, உத்திரப்பிரதேசம் – ஜவுன்பூர் **'வரை' என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்:** குஜராத் – வல்ஸட், மஹாராஷ்டிரா – தானே, ஹிமாச்சலப்பிரதேசம் – காங்க்ரா. **'மலா' என்ற சொல் வழங்கப்படும் இடங்கள்:** பஞ்சாப் – ஜலந்தர்; இராஜஸ்தான் – அஜ்மீர், கர்நாடகம் – உடுப்பி **'மலை'என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட இனப்பெயர்கள்**

மால் பஹாடியா – ஜார்கண்ட்
மல அரயன் – மேற்குத்தொடர்ச்சி மலைகள் – கேரளம்.
மல குறவன் – நெடுமங்காடு – கேரளம்
மல மூத்தன் – ஏர்நாட் – கேரளம்
மல பணிக்கர் – வட கேரளம்
மலயன் – பாலக்காடு – கேரளம்
மலவேடா – இடுக்கி – கேரளம்.

SURA'S

மலேரு – தட்சிண கன்னடா – கர்நாடகம்

கோட்டா – நீலகிரி – தமிழ்நாடு

கொண்டாதோரா – ஆந்திரப்பிரதேசம்.

கோண்டு, கொய்ட்டெர் – ஒடிஸா.

'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப் படுகிறது.

'கோட்டை' என்ற இடப்பெயர்

தமிழ் – கோட்டை , மலையாளம் – கோட்ட, கோடு, கன்னடம் – கோட்டே, கோண்டே, தெலுங்கு – கோட்ட, துளு – கோட்டே, தோடா – க்வாட்.

கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப் பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர்.
"சேயோன் மேய மைவரை உலகம்" – **தொல்காப்பியம்.**
"விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" – **திருமுருகாற்றுப்படை.**

## தாவர வகைப் பெயர்கள்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் 'சொல்லாய்வுக் கட்டுரைகள்' என்ற நூலில் உள்ள 'தமிழ்ச் சொல் வளம்' என்னும் கட்டுரையின் சுருக்கப்பகுதியான தாவரவகைப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள்**

| | |
|---|---|
| **தாள்** | நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி |
| **தண்டு** | கீரை, வாழை முதலியவற்றின் அடி |
| **கோல்** | நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி |
| **தூறு** | குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி |
| **தட்டு (அ) தட்டை** | கம்பு, சோளம் முதலியவற்றின் அடி |
| **கழி** | கரும்பின் அடி |
| **கழை** | மூங்கிலின் அடி |
| **அடி** | புளி, வேம்பு முதலியவற்றின் அடி |

**கிளைப் பிரிவுகள்**

| | |
|---|---|
| **கவை** | அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை |
| **கொம்பு (அ) கொப்பு** | கவையின் பிரிவு |
| **கிளை** | கொம்பின் பிரிவு |
| **சினை** | கிளையின் பிரிவு |
| **போத்து** | சினையின் பிரிவு |
| **குச்சு** | போத்தின் பிரிவு |
| **இணுக்கு** | குச்சியின் பிரிவு |

**காய்ந்த தாவரத்தின் பெயர்கள்**

| | |
|---|---|
| **சுள்ளி** | காய்ந்த குச்சு (குச்சி) |
| **விறகு** | காய்ந்த சிறுகிளை |
| **வெங்கழி** | காய்ந்த கழி |
| **கட்டை** | காய்ந்த கொம்பும் கவையும் அடியும் |

**இலை வகை**

| | |
|---|---|
| **இலை** | புளி, வேம்பு முதலியவற்றின் இலை |
| **தாள்** | நெல், புல் முதலியவற்றின் இலை |
| **தோகை** | சோளம், கரும்பு முதலியவற்றின் இலை |
| **ஓலை** | தென்னை, பனை முதலியவற்றின் இலை |
| **சண்டு** | காய்ந்த தாளும் தோகையும் |
| **சருகு** | காய்ந்த இலை |

**கொழுந்து வகை**

தாவரத்தின் நுனிப்பகுதி 'கொழுந்து' எனப்படும்.

| | |
|---|---|
| **துளிர் (அ) தளிர்** | நெல், புல் முதலியவற்றின் கொழுந்து |
| **முறி (அ) கொழுந்து** | புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து |
| **குருத்து** | சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து |
| **கொழுந்தாடை** | கரும்பின் நுனிப்பகுதி |

**பூவின் நிலைகள்**

| | |
|---|---|
| **அரும்பு** | பூவின் தோற்ற நிலை |
| **போது** | பூ விரியத் தொடங்கும் நிலை |
| **மலர் (அலர்)** | பூவின் மலர்ந்த நிலை |
| **வீ** | மரம், செடிகளிலிருந்து கீழே விழுந்த பூவின் நிலை |
| **செம்மல்** | வாடின பூவின் நிலை |

**பிஞ்சு வகை**

| | |
|---|---|
| **பூம்பிஞ்சு** | பூவோடு கூடிய இளம்பிஞ்சு |
| **பிஞ்சு** | இளம் காய் |
| **வடு** | மாம்பிஞ்சு |
| **மூசு** | பலாப் பிஞ்சு |
| **கவ்வை** | எள் பிஞ்சு |
| **குரும்பை** | தென்னை, பனை முதலியவற்றின் இளம்பிஞ்சு |
| **முட்டுக் குரும்பை** | சிறு குரும்பை |
| **இளநீர்** | முற்றாத தேங்காய் |
| **நுழாய்** | இளம்பாக்கு |
| **கருக்கல்** | இளநெல் |
| **கச்சல்** | வாழைப் பிஞ்சு |

**குலை வகை**

| | |
|---|---|
| **கொத்து** | அவரை, துவரை முதலியவற்றின் குலை |
| **குலை** | கொடி முந்திரி போன்றவற்றின் குலை |
| **தாறு** | வாழைக் குலை |
| **கதிர்** | கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் |
| **அலகு (அ) குரல்** | நெல், தினை முதலியவற்றின் கதிர் |
| **சீப்பு** | வாழைத்தாற்றின் பகுதி |

**கெட்டுப்போன காய்கனி வகை**

| | |
|---|---|
| **சூம்பல்** | நுனியின் சுருங்கிய காய் |
| **சிவியல்** | சுருங்கிய பழம் |
| **சொத்தை** | புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி |
| **அளியல்** | குளுகுளுத்த பழம் |
| **அழுகல்** | குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய் |
| **சொண்டு** | பதராய்ப் போன மிளகாய் |
| **கோட்டான் காய் (அ) கூகைக் காய்** | கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய் |
| **தேரைக் காய்** | தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் |
| **அல்லிக் காய்** | தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய் |
| **ஓல்லிக்காய்** | தென்னையில் கெட்ட காய் |

SURA'S

# கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்.

**இணைப்புச் சொற்கள்**

**நேர்மறையான இணைப்புச்சொற்கள்**

அதனால், ஆகையால், ஆதலால், எனவே, ஆகவே , ஏனெனில், அதுபோல, அப்படியானால், அவ்வாறெனில், மேலும், அவ்விதமாய் .

**எதிர்மறையான இணைப்புச்சொற்கள்**

ஆனால், ஆனாலும், ஆயினும், இருந்தாலும், இருந்தபோதிலும், இருப்பினும், எனினும்.

**அதனால் :** ஒரு செயல் நடைபெற்றதின் விளைவைக் குறிக்கும் சொல்

**எ.கா :** பருவமழை பெய்தது. அதனால், ஏரி, குளங்கள் நிரம்பின.

**ஆகையால் :** ஒரு செயல் நடைபெற்றதற்கான காரணத்தைக் கூறி முடிவையும் கூறும் சொல்.

**எ.கா:** அவன் நன்றாகப் படித்தான். ஆகையால், தேர்வில் வெற்றியடைந்தான்.

**ஏனென்றால் :** ஒரு கருத்திற்கான விளக்கமாக இச்சொல் அமையும்.

**எ.கா:** நாள்தோறும் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால்,அஃது உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும்.

**எனவே :** ஒரு கருத்திற்கான காரணத்தைக் குறிப்பிடும் சொல் ஆகும்.

**எ.கா:** மழைக்காலத்தில் தொற்றுநோய்கள் அதிகமாகும். எனவே தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**ஆகவே :** ஒரு செயல் நடைபெற்றதற்கான அல்லது நடைபெறுவதற்கான காரணத்தையும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கையையும் குறிக்கும் சொல் ஆகும்.

**எ.கா:** அறிவு வளர்ச்சிக்குக் கணினி தேவை. ஆகவே கணினியை இயக்கத் தெரிதல் வேண்டும்.

நாளை பள்ளி ஆண்டு விழா நடைபெறவுள்ளது. ஆகவே மாணவர்கள் அனைவரும் தவிராமல் பள்ளிக்கு வர வேண்டும்.

**ஏனெனில் :** ஒரு செயலின் விளைவிற்கான காரணத்தை விளக்கும் சொல் ஆகும்.

**எ.கா:** முகிலன் இன்று பள்ளிக்குச் செல்லவில்லை. ஏனெனில் அவனுக்கு உடல்நலமில்லை.

**ஆனால் :** ஒரு நிகழ்வு நடைபெறாததற்கான காரணத்தைக் குறிக்கும் சொல்.

**எ.கா :** இன்பரசன் மிகுந்த முயற்சியுடன் ஓடினான். ஆனால் பந்தயத்தில் வெற்றி பெற இயலவில்லை.

**ஆதலால் :** ஒரு செயல் நிகழாமைக்கான தொடர்நிலையைக் குறிக்கும் சொல்.

**எ.கா:** கனத்த மழை பெய்தது. ஆதலால் திடலில் விளையாட்டுப் போட்டி நடைபெறவில்லை.

**ஆயினும் :** ஒரு நிகழ்வின் முரணான செயல் நடைபெறும் போது, அதனைக் குறிக்கும் சொல்.

**எ.கா :** வானில் கருமேகங்கள் திரண்டன. ஆயினும் மழை பொழியவில்லை.

**இருப்பினும் :** முரணனான சூழலிலும் ஒரு செயல் நடைபெறுவதைக் குறிக்கும் சொல்.

**எ.கா :** பேரிடரினால் பல இழப்புகள் ஏற்பட்டன. இருப்பினும் மக்கள் முயற்சியுடன் தொடர்ந்து செயல்பட்டனர்

**மேலும் :** ஒரு நிகழ்வு தொடர்வதைக் குறிக்கும் சொல்.

**எ.கா:** தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. மேலும் இரண்டு நாள்கள் மழையில் நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**அதுபோல :** ஒரு செயலை மற்றொரு செயலுடன் ஒப்புமையாகக் கூறும் போது குறிக்கப்படும் சொல்.

**எ.கா:** குமரன் நல்ல மதிப்பெண் பெற்றுள்ளான். அதுபோல மற்றவர்களும் மதிப்பெண் பெற வேண்டும் என ஆசிரியர் அறிவுரை கூறினார்.

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை நிரப்புக :**

1. வானம் ............. தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.

**விடை:** கருக்கத்

2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் .............

**விடை:** சிவந்தது.

3. ............. மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

**விடை:** வெள்ளை

4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ............ புல்வெளிகளில் கதிரவனின் வெயில் பரவிக் கிடக்கிறது.

**விடை:** பச்சை, மஞ்சள்.

5. வெயிலில் அலையாதே ; உடல் ............. விடும்.

**விடை:** கருத்து

**கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

1. கபிலன் திறமையானவர் என்று ............. (குமரன்) தெரியும்.

**விடை:** கபிலன் திறமையானவர் என்று குமரனுக்குத் தெரியும்.

2. நேற்று முதல் .......... ( அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**விடை:** நேற்று முதல் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

3. உங்களுக்கு .......... ( யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

**விடை:** உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்.

4. முருகன் .......... (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க முடியவில்லை.

**விடை:** முருகன் வேகமாகச் சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

5. நம்முடைய .......... (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**விடை:** நம்முடைய தேவையின் அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக :**

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களைக், நம்மை, வாழ்வியல் அறிவைக்)

1. தமிழ் .......... கொண்டுள்ளது.

**விடை:** செவ்விலக்கியங்களைக்

2. நாம் ............. வாங்க வேண்டும்.

**விடை:** தமிழிலக்கிய நூல்களை

3. புத்தகங்கள் ............. கொடுக்கின்றன.

**விடை:** வாழ்வியல் அறிவைக்

4. நல்ல நூல்கள் ............. நல்வழிப்படுத்துகின்றன.

**விடை:** நம்மை

**பொருத்தமான பெயரடைகளை எழுதுக.**

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

1. எல்லோருக்கும் ............. வணக்கம்.

**விடை:** இனிய

2. அவன் ............. நண்பனாக இருக்கிறான்.

**விடை:** நல்ல

3. ............. ஓவியமாக வரைந்து வா.

**விடை:** பெரிய

4. விலங்கிடம் பழகாதே .............

**விடை:** கொடிய

**பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க.**

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

1. ஊர்தி ............. சென்றது.

**விடை:** மெதுவாகச்

2. ............. காலம் ஓடுகிறது.

**விடை:** வேகமாக

3. சங்க இலக்கியம் வாழ்க்கையை .......... காட்டுகிறது.

**விடை:** அழகாகக்

4. இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ............. காட்டு.

**விடை:** பொதுவாகக்

**அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ............. (திகழ்)

**விடை:** திகழ்கின்றது.

2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ........ (கலந்து கொள்)

**விடை:** கலந்து கொள்வாள்.

3. உலகில் மூவாயிரம் மொழிகள் .......... (பேசு)

**விடை:** பேசப்படுகின்றன.

4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ........... (செல்)

**விடை:** சென்றார்கள்.

5. தவறுகளைத் ............. (திருத்து)

**விடை:** திருத்தினான்.

**கோடிட்ட இடத்தைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**

1. இளமையில் கல்வி .............

**விடை:** முதுமையில் இன்பம்.

2. சித்திரமும் கைப்பழக்கம் .............

**விடை:** செந்தமிழும் நாப்பழக்கம்.

3. கல்லாடம் படித்தவரோடு .............

**விடை:** சொல்லாடாதே.

4. கற்றோர்க்குச் சென்ற ..........

**விடை:** இடமெல்லாம் சிறப்பு.

**ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (ஒரு சொல் இருபொருள் )**

(விலங்கு, எழுதி, அகல், கால், அலை )

1. எண்ணெய் ஊற்றி .......... விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு.

**விடை:** எண்ணெய் ஊற்றி அகல் விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு அகல்

அகல் – விளக்கு, நீங்கு.

2. எனக்கு ............. பங்கு பிரித்துக் கொடுக்க வா ! கீழே ஈரம் பார்த்து உன் ஐ வை.

**விடை:** எனக்குக் கால் பங்கு பிரித்துக் கொடுக்க வா ! கீழே ஈரம் உன் காலை வை.

கால் – ஓர் அளவு , ஓர் உறுப்பு

3. கைப்பொருளைக் கடல் ............. யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி ந்தால் கிடைக்குமா ?

**விடை:** கைப்பொருளைக் கடல் அலையில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி அலைந்தால் கிடைக்குமா ?

அலை – கடல் அலை, அலைதல்

4. வீட்டு .......... ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும். வெளியில் அதனைக் கழுத்து ............. உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

**விடை:** வீட்டு விலங்கான நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும். வெளியில் அதனைக் கழுத்து விலங்குடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

விலங்கு – மிருகம், கழுத்தில் கட்டப்படும் சங்கிலி, கைவிலங்கு

5. எழுத்தாணி கொண்டு .......... ய தமிழை, ஏவுகணையில் ............. எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

**விடை:** எழுத்தாணி கொண்டு எழுதிய தமிழை, ஏவுகணையில் எழுதி எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

6. குழம்பும் கூட்டும் மணப்பது ஏன் ? குருதி மிகுதியாய் கொட்டுவது ஏன்?

**விடை:** பெருங்காயம்

7. ஆடை நெய்வது எதனாலே ? அறிவைப் பெறுவது எதனாலே?

**விடை:** நூல்

8. மாடுகள் வைக்கோல் தின்பது எங்கே ? மன்னர்கள் பலரும் இறந்தது எங்கே?

**விடை:** போர்

9. கதிரவன் மறையும் நேரம் எது ? கழுத்தில் அழகாய்ச் சூடுவது எது ?

**விடை:** மாலை

10. வானில் தேய்ந்து வளர்வது எது ? வாரம் நான்கு கொண்டது எது ?

**விடை:** திங்கள்

**கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைத்தொகைகளை எழுதுக.**

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரை விளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர் பூ)

1. நிலவுடன் ............. அழகாகக் காட்சியளிக்கிறது.

**விடை:** வளர்பிறை, விரிவானம்

2. ........... ங்கொடிகளும், ........... ங்களும் மனதைக் கொள்ளையடிக்கின்றன.

**விடை:** தளிர் பூங்கொடிகளும், விளைநிலங்களும்

3. ........... கள் அனைத்தும். ........... யில் மூழ்கிக் கிடக்கின்றன.

**விடை:** நீள்வீதிகள், மூடுபனியில்

4. மெல்ல வீசும் .......... றும் .......... புகழ்பாடுகிறது.

**விடை:** குளிர் காற்றும், வளர் தமிழ்

5. தொலைவில் கலங் ............. த்தின் ஒளி ............. சுவரை ஒளிரச் செய்கிறது.

**விடை:** கரை விளக்கத்தின், உயர்மதில்

**சரியான விடையைத் தேர்க.**

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று

மாடு, வயல், புல், மேய்ந்தது.

**விடை:** மேய்ந்தது.

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ........

படித்தான், நடக்கிறான், உண்பான், ஓடாது.

**விடை:** படித்தான்

SURA'S

**வினாக்கள் :**

1. **தமிழரின் அகவாழ்வு எத்தகையது ?**
2. **அகத்திணை எத்தனை வகைப்படும் ?**
3. **புறத்திணை எத்தகையது ?**
4. **போருக்கான காரணங்களையும் போர் முறைகளையும் கூறும் புறத்திணைகள் யாவை ?**
5. **ஐந்திணைகளுக்கான சிறுபொழுதுகள் யாவை ?**

**விடைகள் :**

1. உருவம், அகவை, அறிவு ஆகியவற்றில் ஒற்றுமையுடைய தலைவனும் தலைவியும் தாம் துய்த்த இன்பம் இத்தகையது எனப் பிறருக்குப் புலப்படுத்த இயலாத தன்மையுடையது அகவாழ்வாகும்.
2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அகத்திணை ஐந்து வகைப்படும்.
3. புறத்தார் யாவருக்கும் புலப்படும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவது புறத்திணை ஆகும்.
4. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய எட்டுத் திணைகளும் போர் முறைகளும் போருக்கான காரணங்களையும் கூறுகின்றன.
5. சிறுபொழுது என்பது ஒரு நாளுக்கான பிரிவுகள் ஆகும். அவை யாமம், மாலை, வைகறை, எற்பாடு, நண்பகல் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

## 5. தமிழரின் விருந்தோம்பல்

விருந்தோம்பும் பண்பு கணவன், மனைவியின் தலையாய கடமை எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நெடும்பயணம் மேற்கொள்பவர்களால் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களை உடன்கொண்டு செல்வது என்பது இயலாத செயல், அவ்வாறு உணவின்றிப் பயணம் மேற்கொண்டு வருபவர்களுக்கு வழியிலுள்ள வீடுகளில் உள்ளோர் உணவளிப்பர். சங்க காலத் தமிழர்கள் பசியென்று வருபவர்களை வரவேற்க, வீட்டு வாயிலில் காத்திருப்பர். இரவில் வாயில் கதவை அடைக்கும்முன் விருந்தினர் யாரேனும் உள்ளனரா எனப் பார்ப்பர், அவ்வாறு இருப்பின் வரவேற்று உணவளிப்பர்.

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" (தொல், பொருள். 540) என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'விருந்து' என்னும் சொல் 'புதியது' என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தோன்றிய 'விருந்தினர்' என்று சொல்லும் அறிந்தவர், தெரிந்தவராகிய சுற்றத்தார் அல்லது முன்பின் அறியாதவர்கள், வீடு தேடி வருவோரையும் குறிப்பதாகும். இவர்களை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் பண்பே விருந்தோம்பலாகும். பசியென வந்தவர்களை வரவேற்று இன்முகத்தோடு உணவளித்த சிறப்பு, நம் தமிழர்களையே சாரும். தொல்காப்பியக் காலம் முதல் இப்பழக்கம் தமிழர்களிடையே இருந்து வருகிறது.

**விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
**மருந்துஎனினும் வேண்டற்பாற் றன்று** (குறள் 82)

திருவள்ளுவர் இல்லறவியலில் '**விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே**' அமைந்திருக்கிறார்; இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை **"மோப்பக் குழையும் அனிச்சம்"** என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

**"............ தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"**
– சிலப்பதிகாரம், 16 : 72, 73

என்று கண்ணகி வருந்துகிறாள். கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுவதன் மூலம் விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

கலிங்கத்துப்பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.

**"பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**
**வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்**
**விருந்தும் அன்றி விளைவன யாவையே"**
– கம்பராமாயணம், 1 : 2, 36

**"விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண**
**மேன்மேலும் முகமலரும் மேலோர் போல"**
– கலிங்கத்துப்பரணி, 477

**தனித்து உண்ணார்**

தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே தனித்து உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

**"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே......."** – புறநானூறு, 182

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

**அல்லில் ஆயினும்**

விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை

**"அல்லில் ஆயினும் விருந்து வரின்**
**உவக்கும்"** என்று நற்றிணை (142) குறிப்பிடுகிறது.

**இன்மையிலும் விருந்தோம்பல்**

வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை,

**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**
**சிறிது புறப்பட்டன்றோ இலள்**

என்று புறநானூறு (333) காட்சிப்படுத்துகிறது.

நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்; இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி,

**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் .......** – புறநானூறு, 316

என்ற பாடலடிகளில் இடம்பெறுகிறது.

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

**நிலத்திற்கேற்ற விருந்து**

நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை (அடி: 160-163).

**விருந்தை எதிர்கொள்ளும் தன்மை**

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ"**

– என்ற குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

"மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடலில்,

**"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்**
**முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே**
**புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டான்ஈ(து)**
**எல்லா உலகும் பெறும்"**

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

**உற்றாரோடு நின்ற விருந்து**

சங்க காலத்திலிருந்தே அரசனாயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

**ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்**

பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கிற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பினர்.

**"காலின் ஏழடிப் பின் சென்று" –பொருநராற்றுப்படை, 166**

**"இலையை மடிப்பதற்கு முந்தைய**
**வினாடிக்கு முன்பாக**
**மறுக்க மறுக்க**
**பரிமாறப்பட்ட கூடுதல் இட்லியில்**
**நீண்டு கொண்டிருந்தது**
**பிரியங்களின் நீள் சரடு" – அம்சப்பிரியா**

**வினாக்கள் :**

1. **விருந்தினர் என்பதன் பொருள் யாது ?**
2. **கண்ணகி எதற்கு வருந்தியதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார்?**
3. **தமிழர் விருந்தோம்பலில் அடிப்படை பண்பாக விளங்கியது எது?**
4. **வறுமையான நிலையிலும் விருந்தினருக்கு பண்டைத் தமிழர் உணவளித்தனர் – சான்றுகள் தருக.**
5. **'காலின் ஏழடிப் பின்சென்று' என்ற செய்யுள் உணர்த்துவது யாது?**

**விடைகள் :**

1. விருந்தினர் என்றால் 'புதியவர்' என்பது பொருளாகும். "விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" என்ற தொல்காப்பிய நூற்பாவில் 'விருந்து' எனும் சொல் புதியது என்ற பொருளில் அமைந்துள்ளது. இதன் அடிப்படையில் தோன்றிய 'விருந்தினர்' என்ற சொல் முன்பின் அறியாதவர்கள், அறிந்தவர், சுற்றத்தார், வீடுதேடி வருவோர்களைக் குறிக்கின்றது.
2. கோவலனைப் பிரிந்து வாழ்வதை விட, விருந்தினரைப் போற்ற இயலாத நிலையை எண்ணி கண்ணகி வருந்தியதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார்.
3. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாகும். அமிழ்தமே கிடைத்தாலும் தாமே தனித்து உண்ணாமல் பிறருக்கும் கொடுத்து உண்பர்.
4. வீட்டில் தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குத்தியெடுத்து விருந்தினருக்கு உணவளித்தாள் குடும்ப தலைவி என்று புறநானூற்றுப் பாடல் 333 தெரிவிக்கிறது.

   நேற்று வந்த விருந்தினருக்கு தனது வாளை அடகு வைத்து உணவளித்த தலைவன் இன்று வந்த விருந்தினருக்கு தன் கருங்கோட்டு சீறியாழைப் பணையம் வைத்து உணவளித்தான் என புறநானூற்றுப் பாடல் 316 தெரிவிக்கிறது.

   வீட்டிற்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிப்பதற்காக விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்து வந்து சமைத்து உணவளித்தார் மாறநாயனார் என்று பெரிய புராணம் கூறுகிறது.
5. பண்டையத் தமிழர், வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்கள் செல்லவிருக்கும் நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை ஏழு அடிகள் தூரம் வரை நடந்து சென்று வழியனுப்பினர் என்று பொருநராற்றுப் படை கூறுகிறது.

## 6. பண்டைத் தமிழர் பேணிய நட்பு

உள்ளத்தால் ஒன்றியவர்களுக்கிடையில் தோன்றும் அன்பின் உறவே நட்பாகும். மனித உறவுகளில் மிகவும் பெருமை உடையதாகக் கருதப்படுவது நட்பு. நட்பின் பெருமையைச் சங்க இலக்கியங்கள் போற்றிப் பதிவுசெய்துள்ளன. ஒருவருடைய உயர்வுக்கு உழைப்பும், விடா முயற்சியும் காரணமாக இருப்பதுபோல, நல்லோர் நட்பும் காரணமாக அமைகிறது.

நட்பின் இயல்பு குறித்து

**உயிர்ஓர் அன்ன செயிர் தீர் நட்பின் – நற்றிணை 72:3**
**......... யாக்கைக்கு**
**உயிர் இயைந்து அன்ன நட்பின் – அகநானூறு 339:11-12**

எனச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. எலியைப்போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக் கொள்வதினும் புலியைப்போன்ற வலிமையும் பெருமுயற்சியும் உடையவருடன் நட்புக் கொள்வதே சாலச் சிறந்தது என்பதனை,

**புலிபசித் தன்னை மெலிவி லுள்ளத்**
**துரனுடை யாளர் கேண்மை யோடு**
**இயைந்த வைகல் உளவா கியரோ (புறநானூறு 190 : 10-12)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்**
**பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே**
**- (மதுரைக் காஞ்சி 196-197)**

பெறற்கரிய பெரும்பேறு கிடைப்பதாக இருந்தாலும் பொய்மை கலந்த நட்புப் பழியொடு முடியும். எனவே, வாய்மை நிறைந்த நட்பே தூய்மையானது, சிறந்தது, தகுதியானது என்கிறார் மாங்குடி மருதனார்.

அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்த அதியமான், கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து உயிர்விட்ட பிசிராந்தையார், பாரியின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்ட கபிலர் போன்றோரை நட்பிற்கு இலக்கணங்களாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**"பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல்**
**சான்றவர்க்கு எல்லாம் கடன்". - (கலித்தொகை.139:2-3)**

என்று, பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

உண்மையான செல்வம் என்பது, 'பிறர்துன்பம் தீர்ப்பதுதான்' என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கட் செல்வம் என்பதுவே (நற்றிணை. 210:7-9)

உறவினர் கெட வாழ்பவனின் பொலிவு அழியும் என்று பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார் (கலித்தொகை 34). உதவும் பண்பு, வாழ்வியல் நெறியாகத் திகழ்ந்தது என்பதனை இப்பாடலால் அறியமுடிகிறது.

**நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய**
**சொற்புடை பெயர்தலோ இலரே - (நற்றிணை 289:2-3)**
**நிலம்திறம் பெயரும் காலை ஆயினும்**
**கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே**
**- (பதிற்றுப்பத்து.63:6-7)**

SURA'S

நிலம் பெயரினும் நின்சொற் பெயரல் (புறம்.3:14) முதலான பாடல் அடிகளில் நிலம் புடைபெயர்ந்தாலும் பொய்சொல்லக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வினாக்கள் :**

1. **யாரிடம் நட்பு கொள்வது சிறந்தது ?**
2. **நாட்டிற்கு இலக்கணமாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடுபவர்கள் யாவர்?**
3. **நட்பிற்கு இலக்கணம் யாது ?**
4. **நட்பின் அம்சங்கள் யாவை?**
5. **சான்றோர் மதிக்கும் செல்வம் எது ?**

**விடைகள் :**

1. எலியைப் போல் சிறிய முயற்சி உடையவரோடு நட்புக் கொள்வதை விட, வலிமையும் பெருமுயற்சியும் உடையவரிடத்து நட்புக் கொள்வதே சிறந்தது என புறநானூற்றுப் பாடல் 190 கூறுகிறது.
2. அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்த மன்னன் அதியமான், கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருந்து உயிர்விட்ட புலவர் பிசிராந்தையார், பாரியின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்ட புலவர் கபிலர் ஆகியோரை சங்க இலக்கியங்கள் நட்பிற்கு இலக்கணமாகக் குறிப்பிடுகின்றன.
3. உள்ளத்தால் ஒன்றியவர்களுக்கு இடையில் தோன்றும் அன்பின் உறவே நட்பாகும். ஒருவருடைய உயர்வுக்குக் காரணமாக அமைவது நல்லோர் நட்பாகும்.
4. பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதுதல், வாய்மை நிறைந்த தூய்மையான நட்பு ஆகியவை நட்பின் அம்சங்கள் ஆகும்.
5. உடன் சேர்ந்திருப்போர் படும் துன்பத்திற்கு அஞ்சுவதுதான் சான்றோர் மதிக்கும் செல்வம் என்று நற்றிணை 210 ஆவது பாடல் கூறுகிறது.

## 7. சங்ககால மன்னர்களின் மாண்புகள்

சங்க காலம் பொற்காலமாகத் திகழ்வதற்குப் பல காரணங்கள் இருப்பினும் 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம் 187) என்ற ஔவையின் பாடல், 'நாட்டை மேன்மைக்கு உரியதாக மாற்றுவது, அரசனின் மாண்புகளே' என்பதை உணர்த்துகின்றது. சங்ககால மன்னர்கள் கல்வி, வீரம், கொடை, நட்பு, சான்றோரைப் புரத்தல் போன்ற மாண்புகளைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

**வீரம்**

சங்க காலத்தில் ஒருவருக்கொருவர் நாட்டு எல்லைகளைக் காப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் போர்புரிதல் தவிர்க்க முடியாததாக விளங்கியது. போருக்குத் தலைமையேற்று வழிநடத்திச் செல்லவேண்டிய கடமை மன்னனுக்கு இருந்தது. விழுப்புண் தாங்கிப் புறப்புண் நாணும் பண்புடையவர்களாக அரசர்கள் விளங்கினார்கள்.

**ஆவும் ஆனியிற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்மபுக் கடிவிடுதும் நும்மரண் சேர்மின்** - (புறநானூறு 9:1-5)

என்னும் பாடல் வாயிலாகப் பசுக்களும், பார்ப்பனரும், பெண்களும், குழந்தைகளும், முதியோர்களும் நோயுற்றவர்களும், மக்கட்பேறு இல்லாதவர்களும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுமாறு போர் தொடங்குவதற்கு முன்னர் அறிவுறுத்தினர் என்ற செய்தி புலப்படுகிறது. வீரம் செறிந்த போரிலும் அறநெறி காத்தவர் தமிழர் என்பதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**கொடை**

வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள், கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். இவ்வள்ளல் தன்மையைப் பாடாண்திணைப் பாடல்கள் விளக்குகின்றன. இவர்களுள் கடையெழு வள்ளல்கள் குறுநில மன்னர்களாயினும், வரையாது பொருள் வழங்கும் இயல்பினர். ஆய் அண்டிரன் என்னும் குறுநில மன்னன், தன்னை நாடிவந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை 'வான்மீன் பல பூப்பின் ஆனாது மன்னே' என முடமோசியார் என்னும் புலவர் புகழ்கிறார்.

அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர், பாணன், பாடினி, கூத்தர், விறலி போன்றோர்க்குப் பொருள் கொடுப்பதோடு நின்றுவிடாமல், உடுக்க உடையும் உண்ண உணவும் கொடுத்து மகிழ்ந்தனர். மன்னர்களின் இத்தகைய விருந்தோம்பல், புலவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இதனைச் சங்க இலக்கியம், ..... மாசுஇல்

**காம்புசொலித் தன்ன அறுவை உடீஇப்**
**பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கிக்**
**....... ...... ....... .......**
**பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசில்**
**....... ...... ....... ......**
**இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து**
**விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி**
**ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டித்**

- **(சிறுபாணாற்றுப்படை :235-245)**

என்று விவரிக்கிறது.

இதைப் போலப் பதிற்றுப்பத்தில் சேர மன்னர்களது வள்ளல் தன்மையும் விருந்தோம்பல் பண்பும் பெரிதும் பேசப்படுகின்றன. ஆற்றுப்படை நூல்கள், அரசர்களின் வள்ளல்தன்மையைப் பாடுவதற்காகவே உருவாக்கப்பட்டன மன்னரின் வள்ளல் தன்மை அந்நாட்டு மக்களிடமும் இருந்ததை இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன.

**அறநெறி போற்றல்**

அரசர்கள், புலவர்களைப் பரிசில் பெறுவோராக மட்டும் கருதவில்லை. அறநெறிகூறி வழிநடத்தும் தகுதி உடையவர்களாகவும் கருதினர். இதனைப் பகைநாட்டு மன்னனின் புதல்வர்களை, யானையைக்கொண்டு இடறச் செய்யும் வேளையில், புலவர் சொல்கேட்டு நிறுத்திவிடுதல், புலவரின் அறிவுரைக்கேற்ப வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளுதல், போரைத் தவிர்த்தல், பகைநாட்டு ஒற்றன் எனக் கருதி ஒரு புலவரைக் கழுவேற்றும் வேளையில், மற்றொரு புலவர் சொல்கேட்டு அதை நிறுத்துதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள், அக்கால மன்னர்களைத் திருத்தும் கடமை, புலவர்களுக்கும் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**
**................ .............. ............... .................** – **(புறநானூறு 55 : 10)**

**நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண்தட் டோரே**
**தள்ளா தோர்இவண் தள்ளா தோரே**

- **(புறநானூறு 18:28-30)**

எனப் புறநானூற்றில் புலவர்கள் பாடியுள்ளனர். இதனால், அரசர்கள் அறநெறியையே முதன்மையாகக்கொண்டு அரசாள வேண்டும் என்பதும் உழவு செழித்து, உணவு பெருக, நீர்நிலைகளை அமைத்துத் தர வேண்டியது அவர்களின் கடமை என்பதும் உணர்த்தப்பட்டன.

ஏழைப் பெண்ணின் மானம் காக்கத் தன் கையையே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியன், அடைக்கலம் புகுந்த புறாவினைக் காக்கத் தன்னையே தராசுத் தட்டில் ஏற்றிய சிபி மன்னன், கன்றிழந்த ஆவின் கண்ணீருக்கு நீதி வழங்கத் தன்மகனையே தேர்க்காலில் இட்ட மனுநீதிச்சோழன் போன்ற அரசர்களின் செயல்கள் நீதிக்கு முன் அனைவரும் சமம்; நீதி வழங்கும்போது தாம், தமர், பிறர் என்ற பாகுபாடு கருதாமல் நீதி வழங்கி, அறநெறி வழுவாது, ஆட்சி புரிய வேண்டும் என்ற விதிமுறைக்குக் கட்டுப்பட்டு அரசாட்சி நடத்தினர் என்பதைப் புலப்படுத்துகிறது.

வானம் பொய்ப்பினும், விளைச்சல் குறையினும், எதிர்பாராத இடையூறுகள் தோன்றினும் அரசன் நல்லாட்சி செலுத்தாததே காரணம் எனக் கருதுவது அன்றைய மரபு. இப்பழிச் சொல்லுக்கு அஞ்சி, நல்லாட்சி செலுத்தும் பொறுப்பு மன்னனுக்கு இருந்தது.

**மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**
**இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்**
**காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்.**
**- (புறநானூறு 35:27-29)**

என்ற பாடலடிகள் இதனை உணர்த்துகின்றன.

**பிறர்க்கென வாழ்தல்**

சங்கத் தமிழர், பரந்த மனப்பான்மை உடையவராய்த் திகழ்ந்தனர். தந்நலம் கருதாது, பிறர்நலம் பேணும் பெற்றியுடையவராய் விளங்கினர். அனைவரையும் தம் உறவினராகக் கருதும் அவர்தம் மனப்பாங்கை,

**'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**

எனப் பாடிய பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் அடி உணர்த்துகிறது. இப்பாடல், கால எல்லை, நில எல்லைகளைக் கடந்து இன்றும் வாழ்கிறது.

**'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புவின் (புறநானூறு 195:6-7)**
**உண்டால் அம்மஇவ் உலகம் -இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவுஇலர்**
**துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனின், உயிரும் கொடுக்குவர் பழிஎனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்னமாட்சி அனையர் ஆகித்**
**தமக்குஎன முயலா நோன்தாள்**
**பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே**

**(புறநானூறு 182)**

என்ற புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல், சங்ககால மக்களுக்குத் தேவையான பல்வேறு விழுமியங்களை எடுத்துச் சொல்கின்றன. சங்கப் புலவர்கள் அறக்கருத்துகளைப் போதனைகளாகச் சொல்லவில்லை. எளிய சொற்களால் இனிய முறையில் இலக்கியங்களாகப் படைத்தளித்துள்ளனர். எண்ணற்ற போர்கள், அவற்றின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள், கைம்பெண்களின் கையறுநிலை, புலவர்கள் சித்திரிக்கும் வறுமைநிலை ஆகிய இன்னல்கள் பலவும் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றையும் எதிர்கொண்டு சிறந்த விழுமியங்களோடு வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்தியமையே, சங்க இலக்கியங்களின் சிறப்பாகும்.

**காவல் மரம் :** பழந்தமிழ் வேந்தர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மரத்தைத் தம் வெற்றியைச் சிறப்பிக்கும் மரமாகப் போற்றி வந்துள்ளனர். அம்மரம் இரவுபகலாக வீரரால் காவல் காக்கப்படுவதால், அதற்குக் 'கடிமரம்' எனப் பெயர். அம்மரத்தை வெட்டுப்படாமல் பாதுகாப்பது மானமுடைய வேந்தர்க்கு மறப்பண்பாகும். வேங்கை, புன்னை, வேம்பு முதலிய மரங்களைக் காவல் மரங்களெனப் போற்றி வந்துள்ளனர். வேந்தன் ஒருவன், பகை மன்னனை வெற்றிகொண்டதற்கு அடையாளமாக, அவன் நாட்டுக் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது மரபு.

**வினாக்கள் :**

1. **சங்ககால மன்னர்களின் முக்கியப் பண்பு யாது ?**
2. **தமிழர்களின் போர்க்காலங்களில் எவ்வாறு அறநெறியைக் காத்தனர் ?**
3. **'வான்மீன் பல பூப்பின் ஆனாது மன்னே' என்ற பாடலடியின் மூலம் முடமோசியார் தெரிவித்துள்ள கருத்து யாது ?**
4. **சங்ககாலப் புலவர்களின் மாண்புகளுக்குச் சான்றுகள் தருக.**
5. **'காவல் மரம்' என்பது எதனைக் குறிக்கிறது ?**

**விடைகள் :**

1. தங்கள் நாட்டு எல்லைகளை காப்பதற்கும் நாட்டை விரிவுபடுத்துவதற்கும், போர் செய்த சங்ககால மன்னர்கள் போரில் புறமுதுகிட்டு செல்வதையும், புறப்பும் வருவதையும் நாணத் தக்கச் செயல்களாக எண்ணினர்.
2. போர் தொடங்குவதற்கு முன்பு பசுக்கள், பார்ப்பனர்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், நோயுற்றவர்கள், மக்கட்பேறு இல்லாதவர்கள் முதலியோரை பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி போர் வீரர்கள் அறிவுறுத்தி, அறநெறி காத்தனர் என்பதை புறநானூற்றின் 9–ஆவது பாடலின் மூலம் அறிய முடிகிறது.
3. ''ஆய் அண்டிரன் என்ற குறுநில மன்னன், தன்னை நாடி வந்த புலவர்களுக்கு வழங்கிய யானைகளின் எண்ணக்கைக்கு வானிலுள்ள விண்மீன்களின் எண்ணிக்கையும் ஈடாகாது'' என்ற புலவரின் கூற்றின் மூலம் குறுநில மன்னர்களும், வரையாது வாரி வழங்கும் இயல்புடையவர்களாக' இருந்தனர் என்று அறிய முடிகிறது.
4. சங்ககாலப் புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெறுபவர்களாக மட்டும் வாழவில்லை. மன்னர்களுக்கு அறநெறியினைக் கூறி வழிநடத்துபவர்களாகவும் இருந்துள்ளனர்.

   பகை நாட்டு மன்னனின் புதல்வர்களை யானையைக் கொண்டு இடறச் செய்யும் வேளையில் அதனை ஒரு புலவர் தடுத்து நிறுத்தியுள்ளார்.

   புலவரின் அறிவுரைப்படி வரிவிதிப்பைக் குறைத்தல், போரைத் தவிர்த்தல், தவறான தீர்ப்பால் ஒரு புலவரை கழுவேற்றும் வேளையில் மற்றொரு புலவரின் உண்மையான கூற்றைக் கேட்டு தன் தவறான தீர்ப்பை மாற்றிக் கொள்ளுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகளை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.
5. சங்ககால மன்னர்கள் தம் வெற்றியின் அடையாளமாக வேங்கை, புன்னை, வேம்பு முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை கொண்டிருந்தனர். இரவு பகலாக அம்மரம் வீரர்களால் காவல் காக்கப்படும். போரில் வெற்றியடைந்த மன்னன் பகை மன்னனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது மரபாக இருந்தது.

## 8. வாழ்வியல் அறங்கள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திருக்குறள், சிறந்த அறநூலாகும். உலகம் முழுமைக்குமான வாழ்வியல் நெறிகளை வள்ளுவம் கூறுகிறது. இந்தத் தன்மையால்தான், திருக்குறள் பிற மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம் (குறள் 35)**

பொறாமை, பேராசை, சினம், இன்னாச்சொல் ஆகிய நான்கனையும் தீயதெனக் கருதிப் புறந்தள்ளி வாழ்வதே அறம் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் 48)**

இல்லறத்தில் வாழ்பவர்கள் அறநெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தால், அவ்வாழ்க்கை துறவறத்தினும் சிறந்தது என்கிறார்.

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல் (குறள் 84)**

இல்லறத்தார்க்கு உரிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் முதன்மையானது விருந்தோம்பல் பண்பாகும். நல்ல முக மலர்ச்சியோடு விருந்தினர்களைப் பேணுபவர்கள் இல்லத்தில் செல்வம் நிறைந்திருக்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கையாகும்.

தீயவழியில் செல்லாமல் மனத்தை நேர் வழிப்படுத்துவதே அறிவு என்பதும் இப்பூவுலகில் வாழும் உயிர்களின் துன்பத்தைத் தன்னுயிர்த் துன்பமாகக் கருதுவதே அறிவுடைமை என்பதும் வள்ளுவரின் கருத்தாகும். கல்வியின் பெருமையைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடுகிறார்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு (குறள் 397)**

நல்லனவற்றைப் படிக்க வேண்டும். படித்ததை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். அப்படிப்பட்ட கல்வியைப் பெறுபவனுக்கு எல்லா ஊரும் அவன் ஊரே, எல்லா நாடும் அவன் நாடே என்கிறார்.

13. **குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் நிறைவேற காரணமாக இருந்தவர்களுள் ஒருவர்**
 **A.** பண்டித ரமாபாய் **B.** மூவலூர் இராமாமிர்தம்
 **C.** சாவித்திரிபாய் பூலே **D.** டாக்டர் . முத்துலெட்சுமி

**விளக்கம் :** **விடை : D**

1929 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக டாக்டர். முத்துலெட்சுமி நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியில் இருந்த போது தேவதாசி ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணச் சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தார்.

14. **தில்லையாடி வள்ளியம்மை – இதில் தில்லையாடி என்பது**
 **A.** வள்ளியம்மை பிறந்த ஊர்
 **B.** வள்ளியம்மையின் தாயார் பிறந்த ஊர்
 **C.** வள்ளியம்மையின் தந்தை பிறந்த ஊர்
 **D.** வள்ளியம்மை வாழ்ந்த ஊர்

**விளக்கம் :** **விடை : B**

வள்ளியம்மையின் தாய் மங்களம் தஞ்சாவூர் மாவட்டம் தில்லையாடி என்ற ஊரைச் சேர்ந்தவர். இவரது தந்தை முனுசாமி புதுச்சேரியைச் சேர்ந்தவர். திருமணத்திற்குப் பின் மனைவியின் ஊரான தில்லையாடியில் நெசவுத் தொழில் செய்து வந்தார். பின்னர் தென்னாப்பிரிக்காவிற்கு தன் மனைவியுடன் சென்று சிறு வணிகம் செய்து வந்தார். அங்குதான் வள்ளியம்மை பிறந்தார்.

15. **காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்**
 **A.** தில்லையாடி வள்ளியம்மை
 **B.** அம்புஜதம்மாள்
 **C.** அசலாம்பிகையார்
 **D.** மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் **விடை : B**

16. **காந்தி புராணத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை**
 **A.** ஓராயிரத்து முப்பத்து நான்கு
 **B.** ஈராயிரத்து முப்பத்து நான்கு
 **C.** மூவாயிரத்து முப்பத்து நான்கு
 **D.** நான்காயிரத்து முப்பத்து நான்கு

**விளக்கம் :** **விடை : B**

காந்தி புராணம் என்ற நூலை இயற்றியவர் அசலாம்பிகை அம்மையார். இந்நூல் காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது. இந்நூல் ஈராயிரத்து முப்பத்து நான்கு பாடல்களைக் கொண்டது.

17. **தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர் யார் ?**
 **A.** இராணி மங்கம்மாள் **B.** ஜான்ஸி ராணி
 **C.** தில்லையாடி வள்ளியம்மை **D.** வேலு நாச்சியார்

**விடை : A**

18. **அம்புஜதம்மாள் எழுதிய நூல்**
 **A.** இராமலிங்க சுவாமிகள் சரிதம்
 **B.** காந்தி புராணம்
 **C.** முப்பெண்மணிகள் வரலாறு
 **D.** நான் கண்ட பாரதம்

**விளக்கம் :** **விடை : D**

அம்புஜதம்மாள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட வீரப்பெண்மணி ஆவார். காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள் என்று இவரை அனைவரும் போற்றினர். தன்னுடைய எழுபதாண்டு கால நினைவாக 'நான் கண்ட பாரதம் ' என்ற அரிய நூலை எழுதினார். 1964 இல் பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.

19. **ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்த வேலு நாச்சியார் பிறந்த ஆண்டு எது ?**
 **A.** கி.பி. 1730 **B.** கி.பி. 1880
 **C.** கி.பி. 1865 **D.** கி.பி.1800

**விடை : A**

20. **எட்டாம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை யாருடைய பெயரில் தமிழக அரசு வழங்கி வந்தது ?**
 **A.** டாக்டர். முத்துலெட்சுமி அம்மையார்
 **B.** மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
 **C.** கடலூர் அஞ்சலையம்மாள்
 **D.** அம்புஜதம்மாள்

**விளக்கம் :** **விடை : B**

**தமிழகத்தின் அன்னிபெசண்ட்** என்று அழைக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் எட்டாம் வகுப்பு வரை படித்த இளம் பெண்களுக்கு திருமண உதவித் தொகை தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் 2022 ஆம் ஆண்டு முதல் **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வித் திட்டம்** என்று மாற்றப்பட்டது. இத்திட்டத்தின்படி அரசுப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, உயர் கல்விக்காக கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு, கல்லூரியில் சேர்ந்தவுடன் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும்.

# கூடுதல் தகவல்கள்

# பெயர்ச்சொல்லின் வகையறிதல்

**பெயர்ச்சொல் வகைகள்**

**இடுகுறி காரணம் மரபோடு ஆக்கம்**
**தொடர்ந்து தொழில் அல காலம் தோற்றா**
**வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே"**

**(நன்னூல் : 275)**

பெயர்ச்சொல்லானது, இடுகுறிப்பெயராய் வரும் ; காரணப் பெயராய் வரும் ; காலம் காட்டாது. எட்டு வேற்றுமைகளையும் ஏற்கும். உயர்திணையாகவும் அஃறிணையாகவும் வரும். ஆண்பால், பெண்பால் , பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களிலும் வரும். தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும்.

## இடுகுறிப்பெயர் :

காரணம் எதுவும் இல்லாமல், இதற்குப் பெயர் இது என்று இட்டு வழங்கப்படுவது இடுகுறிப்பெயர் ஆகும்.

**எ.கா :** மரம், நிலம், மலை, காடு, பூ, கடல், மண் போன்றவை.

இடுகுறிப் பொதுப்பெயர் :

காரணம் எதுவுமின்றி வழங்கப்படும் பெயர்களில் பொதுவானதாக அமையும் பெயர்கள் இடுகுறிப் பொதுப்பெயர்கள் என வழங்கப்படுகின்றன.

**எ.கா :** மரம் – அனைத்து வகையான மரங்களுக்கும் பொதுவான பெயர் ஆகும்.

மலை – அனைத்து வகையான மலைகளுக்கும் பொதுவான பெயர் ஆகும்.

காடு – அனைத்து வகையான காடுகளுக்கும் பொதுவான பெயர் ஆகும்.

பூ – அனைத்து வகையான பூக்களுக்கும் பொதுவான பெயர் ஆகும்.

## இடுகுறிச் சிறப்புப் பெயர் :

காரணம் எதுவும் இல்லாமல் வழங்கப்படும் பெயர்களில் சிறப்பாக அமைந்திருப்பவை இடுகுறிச் சிறப்புப் பெயர்கள் என வழங்கப்படுகின்றன.

**எ.கா :** மாமரம், இமயமலை, சதுப்புநிலக் காடு, மல்லிகைப் பூ

## காரணப்பெயர் :

ஏதேனும் ஒரு காரணம் கருதி ஒரு பொருளுக்கு வழங்கப்படும் பெயர் காரணப் பெயர் ஆகும்.

**எ.கா :** அணி, பறவை

அணியப்படுவதால், அணிகலன்கள் 'அணி என்றும் பறப்பதால்' பறவை என்றும் வழங்கப்படுகின்றன.

**காரணப் பொதுப்பெயர் :**

காரணம் கருதி வழங்கப்படும் பெயர்களில் பொதுவானதாக அமையும் பெயர்ச்சொற்கள், காரணப் பொதுப் பெயர்கள் என வழங்கப்படுகின்றன.

**எ.கா :** சிறுவன் , அணி, பறவை

**காரணச் சிறப்புப் பெயர் :**

காரணம் கருதி வழங்கப்படும் பெயர்களில் சிறப்பாக வழங்கப்படுபவை காரணச் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

**எ.கா:** வளையல் – வட்டமாக, வளைந்து காணப்படும் பொருள்கள் பல இருப்பினும், வளையல் என்றால் கையில் அணியும் அணிகலனையே குறிக்கின்றது. நாற்காலி, முக்காலி, கரும்பலகை, செங்கல் போன்றவை காரணச் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

## பெயர்ச்சொல் வகைகள் :

பெயர்ச்சொல்லை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. **பொருட்பெயர் :** உயிர் உள்ள, உயிரற்ற பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் ஆகும். (எ.கா) : அமுதன், வளவன், கலைச் செல்வி, கிளி, யானை, மேஜை, புத்தகம் போன்றவை.
2. **இடப்பெயர் :** ஏதேனும் ஓர் இடத்தைக் குறிப்பது இடப்பெயர் ஆகும் ஊர்களின் பெயர்களும் ஊரிலுள்ள நிலப்பிரிவுகளின் பெயர்களும் இடப்பெயர்கள் ஆகும்.. (எ.கா) : சென்னை, பள்ளிக்கூடம், மேடு, பள்ளம், வீடு, அலுவலகம் போன்றவை.
3. **காலப்பெயர் :** ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர் ஆகும். பொழுதுகளின் பெயர்கள், நாள்களின் பெயர்கள், மாதங்களின் பெயர்கள் ஆகியவை காலப்பெயர்கள் ஆகும். (எ.கா): திங்கள் கிழமை, தை மாதம், காலைப் பொழுது, திருவள்ளுவர் ஆண்டு போன்றவை ஆகும்.
4. **சினைப்பெயர் :** பொருள்களின் உறுப்புகளைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர் ஆகும். உயர்திணைப் பொருள்களின் உறுப்புகளையும் அஃறிணைப் பொருள்களையும் குறிக்கும். (எ.கா) : கை, கண், கிளை, இலை
5. **பண்புப்பெயர் :** ஒரு பொருளின் பண்புகளான நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பண்பை உணர்த்தும் பெயர் பண்புப்பெயர் ஆகும். (எ.கா) : வெண்மை, இனிமை, வட்டம், ஒருமை
6. **தொழிற்பெயர் :** ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் ஆகும். தொழிற்பெயர் அல், தல் முதலிய விகுதிகளைப் பெற்று வரும். (எ.கா): ஆடல், பாடல் – அல் விகுதி ; ஆடுதல், நாடுதல் – தல் விகுதி. இவ்விகுதிகள் இல்லாமலும் தொழிற்பெயர் அமைவதுண்டு. அவை முதனிலைத் தொழிற்பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என இரண்டு வகைப்படும். கொதித்தல், இடித்தல் என்று வராமல், சோறு கொதி வந்தது, இடி இடித்தது போன்று அமைபவை முதனிலைத் தொழிற் பெயர்கள் ஆகும். கெடுவான் கேடு நினைப்பான், துப்பாக்கிச் சூடு நடைபெற்றது போன்ற சொற்களில் உள்ள கேடு, சூடு என்பவை கெடு, சுடு போன்றவற்றின் முதல்நிலை திரிந்த தொழிற் பெயர்கள் ஆகும்.

## வினையாலணையும் பெயர் :

ஒரு வினைமுற்று, வினையைக் குறிக்காமல் வினை செய்த கர்த்தாவைக் குறித்தால், அது வினையாலணையும் பெயர் ஆகும்.

**எ.கா:** பாடினான் என்பது வினைமுற்று ஆகும். பாடியவன் என்பது வினையாலணையும் பெயர் ஆகும்.

இது போலவே தந்தவன், படித்தவள், வணங்கியவன் போன்றவை வினையாலணையும் பெயர்கள் ஆகும். இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் அமையும்.

**எ.கா:** எடுத்தேனைப் பார்த்தாயா என்பது தன்மை வினையாலணையும் பெயர்.

சென்றீரைக் கண்டேன் என்பது முன்னிலை வினையாலணையும் பெயர்.

தந்தவனுக்குப் பெருமை கிடைத்தது என்பது படர்க்கை வினையாலணையும் பெயர்.

படிக்காதவர் தேர்வில் வெற்றி பெற முடியாது. என்பது எதிர்மறை வினையாலணையும் பெயர்.

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| தொழிலை மட்டும் உணர்த்தும். | தொழிலையும், தொழில் செய்த கர்த்தாவையும் உணர்த்தும். |
| படர்க்கை இடத்தில் மட்டும் வரும். | தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வரும். |
| காலம் காட்டாது. | காலம் காட்டும். |

SURA'S

## ஆகுபெயர்கள்

ஒரு பெயர் தனிச்சொல்லாக வரும் பொழுது, சொற்பொருளைக் குறிக்கும். ஒரு வாக்கியத்தில் அல்லது தொடரில் தனக்குரிய சொற்பொருளையோ அல்லது சொற்பொருளோடு தொடர்புடைய வேறு ஒரு பொருளைக் குறித்தால், அது அச்சொல்லின் தொடர்ப்பொருள் எனப்படும். இவ்வாறு ஒரு பெயர் தன்னோடு தொடர்புடைய தொடர்ப்பொருளைக் குறித்தால், அஃது ஆகுபெயர் எனப்படும்.

1. ஒரு பெயர்ச்சொல்தான் ஆகுபெயராய் அமையும்.
2. அப்பெயர்ச்சொல் தன் சொற்பொருளை உணர்த்தாது.
3. அச்சொல் தன்னோடு தொடர்புடைய தொடர்ப்பொருளை, இடம்பெறும் வாக்கியத்தின் பொருள் சூழலுக்கு ஏற்ப உணர்த்தும்.
4. பொருள், இடம், காலம் சினை, குணம், தொழில் என்னும் ஆறு பெயர்களின் அடியாகவும் ஆகுபெயர் தோன்றும்.

### ஆகுபெயர்களின் வகைகள்

1. **பொருளாகு பெயர்** : ஒரு வாக்கியத்தில் ஒரு பொருளின் பெயர் தன்னோடு தொடர்புடைய வேறு ஒரு பொருள் குறித்து வருமானால் அது பொருளாகு பெயர் அல்லது **முதலாகு பெயர்** என்று வழங்கப்படும். இதில் ஒரு முழுப் பொருளின் பெயர் அதன் சினையைக் குறித்து வரும். **எ.கா** : 'மல்லிகை சூடினாள்'. இங்கு மல்லிகை என்பது வேர், தண்டு, இலை, பூ ஆகியவற்றைக் கொண்டுள்ள கொடியைக் குறிக்காமல், அக்கொடியின் ஓர் உறுப்பான (சினை) பூவை மட்டும் உணர்த்துவதால் இது பொருளாகு பெயர் ஆகும்.
2. **இடவாகுபெயர்** : 'வகுப்பு கலைந்தது' என்ற தொடரில், வகுப்பு என்பது இடத்தைக் குறிக்காமல், வகுப்பிலிருந்த மாணவர்களைக் குறித்ததால், இஃது இடவாகுபெயர் ஆகும்.
3. **காலவாகுபெயர்** : 'பொழுது சாய்ந்தது' என்ற தொடரில், பொழுது என்பது காலத்தைக் குறிக்காமல், சூரியனைக் குறித்ததால், இது காலவாகுபெயர் ஆகும்.
4. **சினையாகுபெயர்** : 'மரிக்கொழுந்து நட்டனர்' என்ற தொடரில், கொழுந்து என்பது மரிக்கொழுந்து என்ற செடியைக் குறிப்பதால் இது சினையாகு பெயர் ஆகும். கொழுந்து என்பது ஒரு செடியின் உறுப்பாகும். இங்கு உறுப்பானது முழுப் பொருளையும் குறிக்கிறது. இது பொருளாகு பெயரின் மறுதலையாகும்.

   **முழுப்பொருள், உறுப்பைக் குறித்தால் அது பொருளாகு பெயர்; ஓர் உறுப்பு முழுப்பொருளைக் குறித்தால் அது சினையாகு பெயர் ஆகும்.**
5. **பண்பாகுபெயர்** : வண்ணம், வடிவம், அளவு, சுவை, தன்மை ஆகியவற்றைக் குறிக்கும் பண்புப்பெயர்கள் அதன் பொருளை உணர்த்தாமல், பொருளுடன் தொடர்புடைய வேறொன்றைக் குறித்தால், அது பண்பாகுபெயர் ஆகும். 'கார் பெய்தது' என்ற தொடரில் கார் (கருமை) என்ற வண்ணம், அதனைக் குறிக்காமல், கரிய வண்ணம் உடைய மேகத்தைக் குறித்ததால், இது பண்பாகுபெயர் ஆகும்.
6. **தொழிலாகுபெயர்** : 'ஆட்டம் முடிந்தது' என்ற தொடரில், ஆட்டம் என்பது ஆடும் தொழிலைக் குறிக்காமல், ஆடும் செயலோடு தொடர்புடைய கலை நிகழ்ச்சியைக் குறித்ததால், இது தொழிலாகுபெயர் ஆகும்.
7. **எண்ணலளவை ஆகுபெயர்** : பழங்களை விநியோகிக்கும் போது, 'ஆளுக்கு இரண்டு கொடு' என்று கூறினால், இரண்டு என்ற எண் அதனைக் குறிக்காமல், பழங்களைக் குறிக்கும். எண்ணிக்கையைக் குறிக்காமல் அதனுடன் தொடர்புடைய வேறொன்றைக் குறித்ததால், இஃது எண்ணலளவை ஆகுபெயர் ஆகும்.
8. **எடுத்தலளவை ஆகுபெயர்** : 'கிலோ ஐம்பது ரூபாய்க்குக் கிடைக்கும்' என்று அரிசிக் கடைக்காரர் கூறினால், கிலோ என்பது எடை அளவைக் குறிக்காமல் அரிசியைக் குறிக்கும். எடையைக் குறிக்காமல் அதனுடன் தொடர்புடைய வேறொன்றைக் குறித்ததால், இஃது எடுத்தலளவை ஆகுபெயர் ஆகும்.
9. **முகத்தலளவை ஆகுபெயர்** : அமுதன் எண்ணெய்க் கடைக்காரரிடம், 'ஒரு லிட்டர் கொடு' என்று கேட்டான். இங்கு லிட்டர் என்பது கொள்ளளவைக் குறிக்காமல், எண்ணெயைக் குறித்ததால், இது முகத்தலளவை ஆகுபெயர் ஆகும்.
10. **நீட்டலளவை ஆகுபெயர்** : துணிக் கடைக்காரரிடம் , 'இரண்டு மீட்டர் கொடு' என்று கேட்கும் போது, மீட்டர் என்பது நீட்டல் அளவைக் குறிக்காமல், துணியைக் குறித்ததால், இது நீட்டலளவை ஆகுபெயர் ஆகும்.
11. **சொல்லாகுபெயர்** : 'பேராசிரியரின் உரையைப் படி' என்ற தொடரில், உரை என்பது உரை அமைந்துள்ள நூலைக் குறிப்பதால், இது சொல்லாகுபெயர் ஆகும்.
12. **தானியாகுபெயர்** : 'அடுப்பிலிருந்து பாலை இறக்கு' என்ற தொடரில், பால் என்ற திரவத்தைக் குறிக்காமல், பால் உள்ள பாத்திரத்தைக் குறித்ததால், இது தானியாகுபெயர் ஆகும். 'தானி ' என்றால் நீர்மப்பொருளாகும். நீர்மப்பொருளைத் தாங்கியுள்ள பாத்திரம் 'தானம்' எனப்படும்.
13. **கருவியாகுபெயர்** : 'குழல் கேட்டு மகிழ்ந்தாள்' என்ற தொடரில், குழல் என்ற சொல், இசைக் கருவியைக் குறிக்காமல், அந்த இசைக் கருவியிலிருந்து உருவாகும் இசையைக் குறித்ததால் இது கருவியாகுபெயர் ஆகும்.
14. **காரியவாகுபெயர்** : 'அவன் பிழைப்பு நடக்கிறது' என்ற தொடரில், பிழைப்பு என்பது, பிழைப்புக்குக் காரணமாகிய வேலையைக் குறிக்கிறது. பிழைப்பு(வாழ்க்கை) ஆகிய காரியம், வேலை என்ற காரணத்தினால் நடக்கிறது என்று பொருள் கொள்வதால், இது காரியவாகுபெயர் ஆகும்.
15. **கருத்தாவாகுபெயர்** : 'வள்ளுவரைப் படித்தால் நன்னெறியுடன் வாழலாம்' என்ற தொடரில், வள்ளுவர் என்ற சொல், வள்ளுவரைக் குறிக்காமல், அவர் இயற்றிய திருக்குறளைக் குறிப்பதால், இது கருத்தாவாகுபெயர் ஆகும்.
16. **உவமையாகுபெயர்** : 'மலைகள் மோதின' என்ற என்ற தொடரில் மலைகள் என்பது இடப்பெயரைக் குறிக்காமல், மலைகள் போன்ற வலிமையுடைய வீரர்களைக் குறிப்பதால், இஃது உவமையாகுபெயர் ஆகும்.
17. **இருமடியாகுபெயர்** : 'புளி காய்த்தது'. புளி என்பது ஒரு சுவையின் பெயர். இத்தொடரில் உள்ள புளி என்பது முதல் நிலையில், புளியங்காயைக் குறித்தது. மரம்தான் காய்க்கும், எனவே இரண்டாம் நிலையில் புளியங்காய் காய்க்கும் மரத்தைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு சொல், இரண்டு நிலைகளில் ஒன்றோடொன்று தொடர்புடைய இரண்டு பொருள்களுக்கு ஆகி வந்ததால், இஃது இருமடியாகுபெயர் ஆகும்.
18. **அடையடுத்த ஆகுபெயர்** : 'வெற்றிலை நட்டான்'. வெற்றிலை = வெறுமை + இலை. வெறும் இலை மட்டுமே அக்கொடியில் பயன்படுவதால், அக்கொடியின் இலை வெற்றிலை என அழைக்கப்படுகிறது. இதில் வெறுமை என்பது இலைக்கு அடையாகும், இலை என்பது அடைக்குரிய பொருளாகும். வெற்றிலை நட்டான் என்ற தொடரில், வெறுமை என்ற அடையும், இலை என்ற சினையும் சேர்ந்து அதன் முழுப்பொருளான வெற்றிலைக் கொடிக்கு ஆகி வந்ததால், இஃது அடையடுத்த ஆகுபெயர் ஆகும்.
19. **இருபெயரொட்டு ஆகுபெயர்** : ஒரு தொடரில் உள்ள இரண்டு சொற்களுள் ஒன்று சிறப்புப் பெயராகவும் மற்றொன்று பொதுப் பெயராகவும் அமைந்தால் அஃது இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும். வாழை மரம் என்ற தொடரில் வாழை என்பது சிறப்புப் பெயர், மரம் என்பது பொதுப்பெயர். இரண்டு சொற்களும் ஒரு பொருளையே குறிக்கின்றன. இதே போல், வகரக் கிளவி என்ற தொடரில், கிளவி என்றால் சொல் என்று பொருளாகும், இது பொதுப் பெயராகும். வகரம் என்பதும் ஒரு சொல்லாகும். இது சிறப்புப் பெயராகும். வகரக்கிளவி என்பது, வகரச் சொல்லைக் குறிக்காமல், வ என்ற எழுத்தைக் குறிப்பதால், இஃது இரு பெயரொட்டு ஆகுபெயர் ஆகும்.
20. **விட்டவாகு பெயர்** : 'சென்னை வளர்கிறது' . இத்தொடரில் சென்னை என்னும் இடப்பெயர், தனக்குரிய இடத்தைக் குறிப்பதை விட்டுவிட்டுத் தன்னிடத்தில் வாழும் வாழும் மக்களைக் குறித்ததால், இது விட்டவாகு பெயர் ஆகும்.
21. **விடாத ஆகுபெயர்** : 'இனிப்புத் தின்றான்'. இத்தொடரில் இனிப்பு என்னும் சுவையைக் குறிக்கும் சொல், தனக்குரிய இனிமைப் பொருளை விட்டுவிடாமல், அச்சுவையை உடைய தின்பண்டத்தைக் குறிப்பதால், இது விடாதவாகு பெயர் ஆகும்.

## சாகித்திய அகாதெமி விருதுபெற்ற தமிழ் எழுத்தாளர்கள்

| ஆண்டு | படைப்பு | படைப்பாளி |
|---|---|---|
| 1955 | தமிழ் இன்பம் (கட்டுரைத் தொகுப்பு) | ரா.பி.சேதுப்பிள்ளை |
| 1956 | அலை ஓசை (நாவல்) | கல்கி கிருஷ்ணமூர்த்தி |
| 1958 | சக்கரவர்த்தித் திருமகன் (இராமாயணத்தின் உரைநடை) | சி.இராஜகோபாலாச்சாரி |
| 1961 | அகல் விளக்கு (நாவல்) | மு. வரதராசனார் |
| 1962 | அக்கரைச் சீமையில் (பயணநூல்) | மீ.ப. சோமசுந்தரம் |
| 1963 | வேங்கையின் மைந்தன் (நாவல்) | அகிலன் (பி.வி.அகிலாண்டம்) |
| 1965 | ஸ்ரீ ராமானுஜர் (வாழ்க்கை வரலாறு) | பி.ஸ்ரீ. ஆச்சார்யா |
| 1966 | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (வாழ்க்கை வரலாறு) | ம.பொ.சிவஞானம் |
| 1967 | வீரர் உலகம் (இலக்கிய விமர்சனம்) | கி.வா. ஜகந்நாதன் |
| 1968 | வெள்ளைப் பறவை (கவிதை) | அ. சீனிவாச ராகவன் |
| 1969 | பிசிராந்தையார் (நாடகம்) | பாரதிதாசன் |
| 1970 | அன்பளிப்பு (சிறுகதை) | கு.அழகிரிசாமி |
| 1971 | சமுதாய வீதி (நாவல்) | நா.பார்த்தசாரதி |
| 1972 | சிலநேரங்களில் சில மனிதர்கள் (நாவல்) | ஜெயகாந்தன் |
| 1973 | வேருக்கு நீர் (நாவல்) | ராஜம் கிருஷ்ணன் |
| 1974 | திருக்குறள் நீதி இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | கே.டி.திருநாவுக்கரசு |
| 1975 | தற்கால தமிழ் இலக்கியம் (இலக்கிய விமர்சனம்) | ஆர். தண்டாயுதம் |
| 1977 | குருதிப்புனல் (நாவல்) | இந்திரா பார்த்தசாரதி |
| 1978 | புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (விமர்சனம்) | வல்லிக் கண்ணன் |
| 1979 | சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) | தி. ஜானகிராமன் |
| 1980 | சேரமான் காதலி (நாவல்) | கண்ணதாசன் |
| 1981 | புதிய உரைநடை (விமர்சனம்) | மா. ராமலிங்கம் |
| 1982 | மணிக்கொடி காலம் (இலக்கிய வரலாறு) | பி.எஸ்.ராமையா |
| 1983 | பாரதி : காலமும் கருத்தும் (இலக்கிய விமர்சனம்) | தொ.மு.சிதம்பர ரகுநாதன் |
| 1984 | ஒரு காவிரியைப் போல (நாவல்) | லட்சுமி (திரிபுரசுந்தரி) |
| 1985 | கம்பன் : புதிய பார்வை (இலக்கிய விமர்சனம்) | சு.ச. ஞானசம்பந்தன் |
| 1986 | இலக்கியத்துக்காக ஒரு இயக்கம் (இலக்கிய விமர்சனம்) | க.நா. சுப்ரமணியம் |
| 1987 | முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) | ஆதவன் சுந்தரம் |
| 1988 | வாழும் வள்ளுவம் (இலக்கிய விமர்சனம்) | வா.செ. குழந்தைசாமி |
| 1989 | சிந்தாநதி (சுயசரிதக் கட்டுரைகள்) | லா.ச. ராமாமிர்தம் |
| 1990 | வேரில் பழுத்த பலா (நாவல்) | சு.சமுத்திரம் |
| 1991 | கோபல்ல கிராமத்து மக்கள் (நாவல்) | கி.ராஜநாராயணன் |
| 1992 | குற்றாலக் குறிஞ்சி (வரலாற்று நாவல்) | கோவி. மணிசேகரன் |
| 1993 | காதுகள் (நாவல்) | எம்.வி. வெங்கட்ராம் |
| 1994 | புதிய தரிசனங்கள் (நாவல்) | பொன்னீலன் (கண்டேஸ்வர பக்தவல்சன்) |
| 1995 | வானம் வசப்படும் (நாவல்) | பிரபஞ்சன் |
| 1996 | அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) | அசோகமித்ரன் |
| 1997 | சாய்வு நாற்காலி (நாவல்) | தோப்பில் முகமது மீரான் |
| 1998 | விசாரணைக் கமிஷன் (நாவல்) | சா.கந்தசாமி |
| 1999 | ஆலாபனை (கவிதைகள்) | அப்துல் ரகுமான் |
| 2000 | விமர்சனங்கள், மதிப்புரைகள் பேட்டிகள் (விமர்சனம்) | தி.க.சிவசங்கரன் |
| 2001 | சுதந்திரதாகம் (நாவல்) | சி.சு. செல்லப்பா |
| 2001 | அக்கினி சாட்சி (மொழிபெயர்ப்பு நூல்) | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 2002 | ஒரு கிராமத்து நதி (கவிதைகள்) | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 2003 | கள்ளிக்காட்டு இதிகாசம் (நாவல்) | வைரமுத்து |
| 2004 | வணக்கம் வள்ளுவ! (கவிதைகள்) | ஈரோடு தமிழன்பன் |
| 2005 | கல்மரம் (புதினம்) | ஜி. திலகவதி |
| 2006 | ஆகாயத்துக்கு அடுத்த வீடு (கவிதைகள்) | மு.மேத்தா |
| 2007 | இலையுதிர் காலம் (நாவல்) | நீல. பத்மநாபன் |
| 2008 | மின்சாரப்பூ (சிறுகதைகள்) | மேலாண்மை பொன்னுசாமி |
| 2009 | கையொப்பம் (கவிதைகள்) (மொழிபெயர்ப்பு) | புவியரசு |
| 2010 | சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) | நாஞ்சில் நாடன் |
| 2011 | காவல் கோட்டம் (புதினம்) | சு.வெங்கடேசன் |
| 2012 | தோல் (புதினம்) | டேனியல் செல்வராஜ் |
| 2013 | கொற்கை (புதினம்) | ஜோ.டி.குரூஸ் |
| 2014 | அஞ்ஞாடி (நாவல்) | பூமணி |
| 2015 | இலக்கியச் சுவடுகள் (திறனாய்வு நூல்) | ஆ.மாதவன் |
| 2016 | ஒரு சிறு இசை (சிறுகதைகள்) | வண்ணதாசன் |
| 2017 | காந்தள் நாட்கள் (கவிதைகள்) | இன்குலாப் |
| 2018 | சஞ்சாரம் (நாவல்) | எஸ். இராமகிருஷ்ணன் |
| 2019 | சூல் (நாவல்) | சோ. தர்மன் |
| 2020 | செல்லாத பணம் (நாவல்) | இமயம் |
| 2021 | சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை (சிறுகதைத் தொகுப்பு) | அம்பை |
| 2022 | காலாபாணி (நாவல்) | மு. இராஜேந்திரன் |
| 2023 | நீர்வழிப் படூஉம் (நாவல்) | தேவி பாரதி |
| 2024 | திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908 (திறனாய்வு) | ஏ.ஆர். வெங்கடாசலபதி |